வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 05 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 280 பக்கங்கள் : 16

# அருந்தவபாலனுக்கு இடம் இல்லை தமிழ் மக்கள் கூட்டணியில் குழப்பம்

## மத்திய குழுவிலிருந்து சிலர் விலகல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 06

**தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் க.அருந்தவ பாலனுக்கு இடம் வழங்குவதில்லை என்று அக்கட்சியின் வேட்பாளர் தெரிவுக்குழு முடிவு செய்துள்ளதாக அறியவருகின்றது.**

இதையடுத்து அந்தக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் கட்சியை விட்டு விலகியுள்ளனர் என்று கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செம்ரெம்பர் 30ஆம் திகதி கூடிய கட்சியின் மத்திய குழுவில் கட்சியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அருந்தவபாலனை முதன்மை வேட்பாளராக நிறுத்துவதற்கு ஆலோசனை தெரிவித்திருந்தார். மத்திய குழுவும் இதற்கு இணங்கியிருந்தது.

ஆனால், கட்சியிலுள்ள மணிவண்ணன் தரப்பினர் இதனை விரும்பியிருக்கவில்லை. அவர்கள் கட்சியின் தலைமையை சந்தித்து உரையாடியமையைத் தொடர்ந்து நிலைமையில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேநேரம், கட்சியில் மீண்டும் இணைவதற்கு அருந்தவபாலன் சில நிபந்தனைகளை முன்வைத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் கட்சித் தலைவர் விக்னேஸ்வரன் வேட்பாளர் பட்டியலில் அருந்தவபாலனுக்கு இடமளிப்பதில்லை என்று முடிவெடுத்து அதனை கட்சியினருக்கு

15

## மோடியை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 06

வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்குக் கூறியதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மிக

15

## அரசியலுக்கு விடைகொடுத்தார் சமல்!

கொழும்பு, ஒக். 06

எதிர்வரும் பொதுத்தேர்தலில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ போட்டியிடமாட்டார் என தெரியவருகின்றது.

எனினும், அவரின் மகன் ஷசீந்திர ராஜபக்ஷ இம்முறையும் களமிறங்குவார் என அறியமுடிகின்றது.

சமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்தே பாராளுமன்றம் தெரிவாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## திருமலை, அம்பாறையில் வீட்டு சின்னம் தமிழ் கட்சிகளை அழைக்கிறது தமிழரசு!

### சிறிதரனும் சுமந்திரனும் யாழ். மாவட்டத்தில் போட்டி

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக். 06

திருகோணமலை, அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிட ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. நானும் சிறிதரனும் யாழில் போட்டியிடுவோம். அத்துடன் எமது கட்சியில் போட்டியிட பெண்களுக்கு அழைப்பு விடுகின்றோம் என தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்றது. இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

## ஒரு தேசிய பட்டியல் ஆசனத்துக்காக இரண்டு ஆசனங்களை இழப்பதா?

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கேள்வி

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக். 06

தமிழரசுக் கட்சி ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரு பிரதிநிதிகளை இழக்கும் நிலையை ஏற்படுத்தப்போவதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.



ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் இடம்பெற்ற

15

## ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழரசு எம்முடன் பேசலாம்!

### கூறுகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 06

பொதுத்தேர்தலுக்கு பிறகு எம்முடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) உள்ளிட்ட தரப்புகள் எம்முடன் பேச்சு நடத்தலாம் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி), தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க முன்வந்தால் அது தொடர்பில் தங்கள் தரப்பு

15

## வாகன இறக்குமதி ஆரம்பம்

கொழும்பு, ஒக். 06

பொது போக்குவரத்து சேவைக்காக பஸ் உள்ளிட்ட வாகன இறக்குமதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து இவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டின் முதல் காலாண்டு தொடக்கம் கார் உள்ளிட்ட இலகு ரக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் இவை 3 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படும் எனவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## செல்வம், சிவசக்தி, துளசி வன்னி மாவட்டத்தில் போட்டி

### ஐ.த.தே. கூட்டணியின் சார்பில்

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக். 06

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி தேர்தல் மாவட்ட வேட்பாளர்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் துளசி ஆகியோர் போட்டியிட உள்ளனர் என தெரிய வருகிறது.

15

## 80 வகை மருந்துகள் நாட்டில் தட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 06

நாட்டில் தொடர்ந்தும் 80 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மருந்துகளை வைத்தியசாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதன் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய சிக்கல்கள் இன்றி சிகிச்சைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும் என அவர் கூறினார்.

இதனிடையே, மருந்து பற்றாக்குறை

15

## யோஷித, ஜோன்ஸ்டன் உட்பட 1,500 பேருக்குத் துப்பாக்கிகள்!

### மகிந்த வழங்கினார் என பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஒக். 06

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் காலப்பகுதியில் அவரது மகன் யோஷித ராஜபக்ஷ, 'அவன் கார்ட்' உரிமையாளர் நிஷங்க சேனாதிபதி, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 1500 பேருக்கு 1690 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோவுக்கு 8 துப்பாக்கிகளும், நிஷங்க சேனாதிபதிக்கு 9 துப்பாக்கிகளும்,

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய பாதுகாப்பு நலன்களுக்கு இலங்கையால் பாதகம் ஏற்படாது

## ஜெய்சங்கரிடம் ஜனாதிபதி வாக்குறுதி

கொழும்பு, ஒக். 06

**இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு பாதகமாக இலங்கை நிலப்பரப்பு ஒருபோதும் பயன்படுத்தப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார் - இவ்வாறு இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.**

இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார இதனைக் குறிப்பிட்டதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனப்பிரச்னை மற்றும் நல்லிணக்கச் செயல்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய ஜெய்சங்கர், இலங்கையின் ஐக்கியம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைப் பேணுவதன் மூலம் சமத்துவம், நீதி, மரியாதை மற்றும் அமைதிக்கான தமிழ் மக்கள் உட்பட அனைத்து சமூகங்களின் அபிலாஷைகளுக்கும் இந்தியாவின் ஆதரவை வலியுறுத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உண்ணிக் காய்ச்சலால் யாழில் யுவதி மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 06

உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட யுவதி ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த 19 வயது யுவதியே உயிரிழந்தார்.

காய்ச்சல் காரணமாக இந்த யுவதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தமை மருத்துவமனையில் கண்டறியப்பட்டதையடுத்து, 10 நாட்க ளாக தொடர் சிகிச்சை வழங்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அந்த யுவதி உயிரிழந்தார். (எ)

# அரச புலனாய்வு சேவைக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

கொழும்பு, ஒக். 06

அரச புலனாய்வு சேவையின் புதிய பணிப்பாளராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க குமார நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் குறித்த பதவியில் இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே ஓய்வு பெற்றதை அடுத்து தம்மிக்க குமார நியமிக்கப்பட்டுள்ளார்.

# பாராளுமன்ற தேர்தலில் ஈரோஸ் தனித்து போட்டி

வவுனியா, ஒக். 06




எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) வடக்கு - கிழக்கில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயல்குழு கூட்டம் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அந்தக் கட்சியின் செயலாளர் எ. இ. இராசநாயகம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தவை வருமாறு,

"தென்பகுதி மக்கள் தமக்குரிய தலைமையை தெரிவு செய்துள்ளனர். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியம் என்ற நிலைமையை தக்கவைத்து தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டியிருந்தமையால் நாம் அரசியலில் தீவிரமாக ஈடுபடவில்லை. இன்று தமிழ்த் தேசியம் சீரழிந்து சிதறடிக்கப்பட்டு மக்கள் கலங்கிய குளத்தில் நீந்துகின்ற மீன்களாக உள்ளனர்.

பல்வேறு சக்திகளாலும் எமது மக்களின் வாக்குகள் கவரப்படுகின்ற பரிதாப நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எனவே, மக்கள் அனைவரும் ஓர் அணியாக திரண்டு ஈரோஸ் அமைப்பினூடாக போட்டியிடும் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்"- என்றார்.

இந்தச் சந்திப்பில் கட்சியின் தலைவர் துஷ்யந்தன், கட்சியின் முக்கியத்தர்கள் கலந்து கொண்டனர்.(எ)

# மும் மொழியிலும் ஏ சித்திகளை பெற்ற மாணவி



யாழ்ப்பாணம், ஒக் 06

யாழ்ப்பாணம், உடுவில் மகளிர் கல்லூரியின் மாணவி தரண்ஜா கோபிநாத் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்தியை பெற்றுக் கொண்டதுடன் மும்மொழியிலும் அதிவிசேட திறமைச் சித்தியை பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளார்.

அந்த வகையில் தமிழ் ஏ, ஆங்கிலம் ஏ, ஆங்கில இலக்கியம் ஏ, சிங்களம் (இரண்டாம் மொழி) ஏ என்ற சித்தியை பெற்றுக் கொண்டதுடன், மொத்தமாக 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.

இது ஒரு வரலாற்று சாதனையாக கருதப்படுகிறது. வெற்றி பெற்ற மாணவிக்கு பல்வேறு தரப்பினரும் தமது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். (எ-05)

ஆடம்பர கார் தொடர்பில்

# பிரபல நடிகை பியூமியிடம் மீண்டும் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஒக். 06

பிரபல நடிகை பியூமி ஹன்சமாலியிடம் சட்டவிரோத சொத்துக்கள் தடுப்பு விசாரணை பிரிவு மீண்டும் விசாரணை நடத்தியுள்ளது.

அவருக்கு சொந்தமான பி. எம். டபிள்யூ கார் மற்றும் அவரது சொத்துக்கள் தொடர்பில் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, சுமார் 9 மணி நேரம் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை 5ஆம் திகதி பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தல்காரரின் பி. எம். டபிள்யூ ரக கார் பிரபல நடிகை பியூமி ஹன்சமாலியிடம் இருந்து வாங்கப்பட்டமை விசாரணையில் தெரியவந்தது.

இதன்படி, பி. எம். டபிள்யூ கார் வாங்குவதற்கு பியூமி ஹன்சமாலி எப்படி பணம் சம்பாதித்தார் என்பது குறித்தும், அவர் விற்பனை செய்யும் அழகு சாதன பொருட்கள் ஊடாக அதிக அளவு பணம் பெற்றது குறித்தும் சட்டவிரோத சொத்துக்கள் தடுப்பு புலனாய்வுப் பிரிவு விசாரணையை ஆரம்பித்தது.

அந்த விசாரணை தொடர்பான வாக்குமூலங்களை வழங்குவதற்காக பியூமி ஹன்சமாலி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் சட்டவிரோத சொத்துக்கள் தடுப்பு புலனாய்வு பிரிவில் முன்னிலையானார்.

சுமார் 9 மணி நேரம் வாக்குமூலம் அளித்துவிட்டு மாலை 6 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். (எ)

# அநுர அரசில் ரணில் பிரதமர்!

## முன்னாள் பிரதி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஒக். 06

ஜனாதிபதி அநுரகுமாரவுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைந்தால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் என்று முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல் லாஹ் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் அந்தக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தவிசாளராகவும், மூதூர் தொகுதி அமைப்பாளராகவும் அப்துல்லாஹ் மஹ்ரூப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சிறந்ததொரு தலைவனுக்கான உதாரணமாக ரணில் விக்கிரமசிங்க விளங்குகிறார். முஸ்லிம் சமூகத்துக்காக குரல் கொடுத்தவர் ரணிலே. ரிஷாத் பதியுதீன் சிறையில் அடைக்கப்பட்டபோதும் கூட பாராளுமன்றில் குரல் கொடுத்தவர். எனவே, ரணிலுக்குத் தான் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.



ரிஷாத், ஹக்கீம் போன்றவர்கள் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி வருகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருக்கும்போது தனித்துப் போட்டியிட வேண்டும் என தெரிவித்தேன். அதனை ரிஷாத் மறுத்தார். இதனால் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி ரணிலுடன் இணைந்தேன்.

சஜித் பிரேமதாஸவால் ஆட்சிக்கு வரமுடியாது. ஏனென்றால், 2019இல் போட்டியின் போது ஐக்கிய தேசிய கட்சியின் ரணிலின் வாக்கும் அங்கு இருந்தது. மூன்று தேர்தல்களில் இரு ஜனாதிபதி பொதுத் தேர்தலிலும் ஒரு பொதுத் தேர்தலிலும் தோல்வி கண்ட சஜித்துடன் இணைந்து ரிஷாத், ஹக்கீம் சிறுபான்மையினரை எப்படி பாதுகாப்பது. அவர்கள் ஏமாற்றுகிறார்கள். பெரும்பான்மை ஆசனத்தை அதாவது இம்முறை 113ஐ இந்த அரசாங்கத்தால் பெற முடியாது.

எனவே, அநுரகுமாரவுடன் இணைந்து எதிர்காலத்தில் தேசிய அரசாங்கம் அமைந்தால் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமர் ஆகலாம்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக சிலிண்டர் சின்னத்தில் ரணில் கூட்டணியில் போட்டியிடவுள்ளேன் என்று அப்துல்லாஹ் மஹ்ரூப் மேலும் தெரிவித்தார். (எ)

# வீட்டுத் தோட்டப் போட்டி விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 06

மாணாக்க உழவர் - 2024 வீட்டுத் தோட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆண்டு தோறும் மாணவர்களிடையே நடத்தி வரும் மாணாக்க உழவர் வீட்டுத் தோட்டப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மாணாக்க உழவர் என்னும் வீட்டுத் தோட்டப் போட்டி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, நஞ்சற்ற உணவு உற்பத்தி, மாணவர்களை மன அழுத்தங்களில் இருந்து விடுவித்தல் ஆகியவனவற்றை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தப் போட்டியின் இந்த ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏற்கனவே வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்களும், புதிதாக ஈடுபட விரும்பும் மாணவர்களும் இந்த ஆண்டுக்குரிய மாணாக்க உழவர் போட்டியில் கலந்துகொள்ள முடியும். போட்டிக்கான விண்ணப்ப முடிவு இம்மாதம் 10ஆம் திகதி (10.10.2024) ஆகும்.

போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம், அரசடிவீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தையும், இலவசமாக விதைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ்களும் சிறப்பாக வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்பவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் பலவீனப்படுவதற்கு அரசியல் கட்சிகளே காரணம்

## யாழ். பல்கலை. மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஒக். 06

**"தமிழ் மக்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் மயப்படுத்தப் படாமையும் தேசமாய் அணி திரட்டப்படாமையுமே அனைத்துத் தளங்களிலும் பலவீனப்பட்ட மக்களாய்ப் போகக் காரணம். தமிழ் மக்களின் அரசியல் தனியே அடையாளத்திற்கானதன்று. அது இறைமைக்கானது. தமிழ்த் தேசியம் என்பது வாழ்க்கை முறை, அதனை தேர்தல்க் கால வெற்றுக் கோசமாக மாற்றியமைத்தது சிங்கள - பௌத்த நிகழ்ச்சி நிரலுக்கு துணை போன தமிழ் அரசியல் கட்சிகளே".**

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய ஊடக மற்றும் வெகுசனத் தொடர்புப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நாங்கள் எமது தாயகத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுதல் மற்றும் பொருண்மிய வளங்களை ஒன்று திரட்டி தற்சார்புப் பொருளாதாரத்தை முன்னெடுக்காமையும், ஆதிக்க சக்திகளையும் பகை முரண்களையும் கையாள்வதில் உரிய தந்திரோபாயங்களை வகுக்காமையுமே அவர்களிடமே சரணாகதியடைந்த தமிழ் அரசியலால் இதுவரை காலமும் விளைந்த தொன்று.

முற்போக்கு அம்சங்களைக் கொண்ட புதிய மாறுதல்களுக்குத் தமிழ்த் தேசிய அரசியல் தயாராக வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் கூட்டு முகவராண்மையைச் சிதைப்பதற்கு தமிழ்த் தேசிய போலிகள் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் நாங்கள் அனைவரும் தமிழ்த் தேசிய அரசியல் பண்பாட்டினை அறிவுபூர்வமாக விழிப்புடன் அணுகுவதற்கு முன்வர வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகமாக அனைவரையும் சமூகப் பொறுப்புடன் வேண்டி நிற்கின்றோம்" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 2 மோட்டார் சைக்கிள்கள் மோதி இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 06

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமுனை இறக்கச் சந்தியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

இதில், ந. பரமேஸ்வரன் (வயது - 48) மற்றும் கேதீஸ் சர்மா (வயது -20) ஆகிய இருவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மருதங்கேணி பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கிருந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இந்த நிலையில், ஒருவர் ஆபத்தான நிலையில் காணப்பட்டமையால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக அங்கிருந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லாமையால் சுமார் 30 நிமிடம் வரை விபத்து இடம்பெற்ற பகுதியிலேயே காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

காயங்களுக்குள்ளானவர்களை 30 நிமிடங்களின் பின்னரே மீட்கப்பட்டு மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த விபத்து தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-2)



# அராலியில் புதிதாக கட்டிய மதிலை உடைத்த விசமிகள்

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாணம், அராலி பகுதியில் நேற்று முன்தினம் புதிதாக கட்டிய மதிலின் ஒரு பகுதியை இனந்தெரியாத சிலர் உடைத்துள்ளதாக வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெற்றுக் காணி ஒன்றை சுற்றி புதிதாக மதில் கட்டப்பட்டது. இந்த நிலையில் விசமிகள் நேற்று முன்தினம் இரவு, சுமார் 150 அடிகள் நீளம் கொண்ட மதிலை உடைத்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# மதுபானசாலைக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாணம் நீர்வேலியில் திறக்கப்படவுள்ள மதுபான சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஈடுபட்டனர்.

அரசாங்கம் மதுபானசாலைகளுக்கான அனுமதிகளை தடை செய்கின்ற போதும் புதிதாக வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் நீர்வேலியில் மதுபானசாலை ஒன்றை திறப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் அதனை உடனே தடுத்து நிறுத்துமாறு கோரி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



அத்தியார் இந்துக்கல்லூரி, கந்தசுவாமி கோவில் என்பன வற்றுக்கு அருகிலே இந்த மதுபானசாலை திறக்கப்படவுள்ளதால் பாடசாலை மாணவர்கள் கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். எனவே, மதுபானசாலை திறக்கப்படுவதை உடனடியாக நிறுத்தக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் மகஜர் ஒன்றையும் கோப்பாய் உதவி பிரதேச செயலர் சஞ்சீவன் ராதிகாவிடம் பொது மக்கள் கையளித்தனர். (எ)

# சீலரத்தின தேரர் வேட்பு மனு

வவுனியா, ஒக். 06

பாராளுமன்றத் தேர்தலுக்கான முதலாவது வேட்பு மனுவை பத்தரமுல்லே சீலரத்தின தேரர் தாக்கல் செய்தார்.

வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக ஜனசெத பெரமுனவின் தலைவர் சீலரத்தின தேரர் குறித்த வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் குறித்த வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. (எ)

# யாழ்ப்பாண கல்வி வலயத்தின் செயல்பட்டு மகிழ்வோம் விழா

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் 2024ஆம் ஆண்டுக்கான செயல்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா ராஜசீலன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் கே. ஜே. பிரட்லி கலந்து சிறப்பித்தார்.

இதேவேளை, சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் ஈ. எஸ். பி. நாகரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற்றலை தொடர்ந்து கொடியேற்றல் நிகழ்வு நடைபெற்றது.

மாணவர்களின் ஆரம்ப உடற்பயிற்சியை தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலயத்தின் 34 பாடசாலைகளின் 84 அணிகளைக் கொண்ட 1008 மாணவர்கள் பங்குபற்றினர் என்பதுடன் 100 ஆசிரியர்கள் நடுவர் பணிகளில் ஈடுபட்டனர். போட்டிகளில் முதலிடங்களைப் பெறும் மாணவர்கள் நேரடியாக தேசிய மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். (எ-05)





# சங்கு சின்னம் குறித்த வாக்குறுதி காற்றில்!

## சுகாஷ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 06

சங்கு சின்னம் அரசுக்கு பேதங்களை கடந்த பொதுச் சின்னமாக இருக்குமென்ற வாக்குறுதி காற்றில் பறந்து விட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

"நாங்கள் கூறியது அனைத்தும் உண்மை என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டது. சங்கு சின்னம் தனியொரு கட்சியின் சின்னமாகியது. எங்கள் முடிவுகள் கொள்கையின் பாற்பட்டதே தவிர, மதுபான அனுமதிப் பத்திரங்களையோ, வேறு சலுகைகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகின்றது.

அன்புக்குரிய மக்களே, பாராளுமன்றத் தேர்தலில் தடம்மாறாத கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்துக்கு அளிக்கும் வாக்குகளே தமிழினத்தின் எதிர்கால இருப்பைத் தீர்மானிக்கும் என்பதைப் பொறுப்போடு பதிவு செய்கின்றோம் - என்றுள்ளது. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கமின்றி பொறுப்பானவர்களை மாகாண ஆளுநர்களாக நியமிக்கவேண்டும்!

## மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை



கொழும்பு, ஒக். 06

**ஆளுநர்களை நியமிக்கும்போது அரசியல் நோக்கங்கள் இன்றி பொறுப்பானவர்களை நியமிக்குமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று நாராஹேன் பிட்டியில் அமைந்திருக்கும் ராமண்ய பீடத்திற்கு சென்று இலங்கை ராமண்ய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. மகுலேவே விமலநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுகொண்டார்.

அநுநாயக்க தேரர்கள், பதிவாளர்கள் தலைமையிலான மகா சங்கத்தினர் இதன்போது கலந்துகொண்டிருந்ததோடு, அவர்கள் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமைகள் குறித்து மகா சங்கத்தினருக்கு எடுத்துக் கூறும் வகையில் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

தூதுவர்களை நியமிக்கும் போது, கற்ற, அறிவார்ந்த, வெளிநாடுகளில் இந்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பொருத்தமானவர்களை நியமிக்குமாறும், ஆளுநர்களை நியமிக்கும்போது அரசியல் நோக்கங்களுக்காக அன்றி பொறுப்பான வர்களை நியமிக்குமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

அதேபோல் அமைச்சுக்களின் செயலாளர் பதவிக்கும் பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டவாறு தீர்மானங்களை எடுப்பதே தமது நோக்கமாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் உரிய மறுசீரமைப்புக்களை செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான குழுவினர் மீது வைத்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மகாசங்கத்தினர் ஆசி என்றும் ஜனாதிபதிக்கு கிட்டும் என வண. மகுலேவே விமல நாயக்க தேரர் தெரிவித்தார்.(அ)

# புறக்கோட்டையில் ஒருவர் கொலை

கொழும்பு, ஒக். 06

கொழும்பு புறக்கோட்டை 02ஆம் குறுக்கு பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் நேற்று கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தினால் நேற்று ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹியங்கனை பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய நபரே தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். தனிப்பட்ட பிரச்னை காரணமாக இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் புறக்கோட்டை பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ள துடன் சம்பவம் தொடர்பில் புறக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# டெங்கு பரவல் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 06

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக, கடந்த செப்ரெம்பர் மாதத்தின் இறுதியில் இருந்து, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக, சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத் தலைவர் நஜித் சுமனசேன தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதி வரை, 38 ஆயிரத்திற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, 20 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கத் தலைவர் நஜித் சுமனசேன குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 06

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, கடந்த செப்ரெம்பர் மாதத்தில், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றவர்களின் எண்ணிக்கை, கணிசமாக அதிகரித்துள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம், 28 ஆயிரத்து 344 பேர், வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அதற்கமைய, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை, 10 வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு செம்ரெம்பர் மாதம், 25 ஆயிரத்து 716 பேர், வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

2024 ஆம் ஆண்டின் கடந்த 9 மாதங்களில், 2 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக, நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அவர்களில், 99 ஆயிரத்து 939 பெண்களும், ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 170 ஆண்களும் அடங்குகின்றனர்.

கடந்த 9 மாதங்களில், 6 ஆயிரத்து 391 பேர் இஸ்ரேலுக்கும், 6 ஆயிரத்து 295 ஜப்பானுக்கும், 5 ஆயிரத்து 870 பேர் தென் கொரியாவுக்கும் சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# 122 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

கொழும்பு, ஒக். 06

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்றுமுன்தினம் வரை 122 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகவும், நேற்றுமுன்தினம் மட்டும் 36 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

22 தொகுதிகளில் 21 தொகுதிகளுக்கு சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

நேற்றைய தினம் வரை மாத்தளை தொகுதியில் எந்த வொரு கட்சியும் கட்டுப் பணத்தை வைப்பிலிடவில்லை என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பமானதுடன், எதிர்வரும் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இந்தநிலையில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தொகுதிகளுக்கு ஜனசேத பெரமுன கட்சி நேற்று முன்தினம் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதுடன் மூன்று சுயேச்சைக் குழுக்களும் நேற்றுமுன்தினம் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட சிறீலங்கா சுதந்திர கட்சி தீர்மானம்

## நிமால் சிறிபால டி சில்வா தகவல்

கொழும்பு, ஒக். 06

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஹாஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்சியின் அரசியல் குழு மற்றும் மத்திய செயல் குழு என்பன கூடி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக மாத்திரமே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தனது தலைமையிலான கூட்டணியுடன் புதிய சின்னத்தில் போட்டியிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# பாராளுமன்ற தேர்தலுக்காக ஐவர் வேட்பு மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக். 06

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக இதுவரை 05 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, அரசியல் கட்சிகளின் சார்பில் 2 பேரும் சுயேச்சை குழுவாக 3 பேரும் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர் என்று அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(எ)

# பிரதமருக்கு ஜூலி சங் வாழ்த்து

கொழும்பு, ஒக். 06

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அமைதியான மற்றும் ஜனநாயகத் தேர்தலை நடத்தி, சுமுகமான ஆட்சி மாற்றத்தை உறுதி செய்ததற்காக இலங்கையைப் பாராட்டுவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இரு நாடுகளும் கல்வி, பெண்களை வலுவூட்டுதல், சிறுவர் சுகாதாரம், சுதேசவாசிகளுக்கான பன்மொழி மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல முக்கிய துறைகள் குறித்தும் வீட்டு மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன. முதலீட்டை ஈர்ப்பதற்காக இலங்கையில் பொருளாதார வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது. மேலும், வினைத்திறனை மேம்படுத்த வரி சேகரிப்பு முறைகளை சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.10.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிவில் சமூகங்களின் அரசியல் தலையீடு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் நோக்கில் தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் சிலர் முன்னோடிகளாக இருந்தனர். 'மக்கள் மனு' - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழுவே பொது வேட்பாளர் நிலைப்பாட்டை மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்தப் பின்புலத்தில் கொள்கைரீதியாக பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்று கருதியவர்கள் இதற்கான தலைமைத்துவத்தை வழங்கி வந்தனர்.

மிகவும் பிந்திய நிலையில் விடயங்களை முன்னெடுத்த காரணத்தினால் பொதுச் சபை என்பது மிகவும் பலவீனமான நிலையிலிருந்தது. இந்தப் பின்புலத்தில்தான் ஒரு பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் பொதுச் சபையால் எவ்வாறான முடிவை மேற்கொள்வது என்று தெரியாத நிலைக்கு குறித்த அமைப்பு தள்ளப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமை அரசியல் கட்சிகள் மத்தியிலும், தமிழ் மக்கள் பொதுச் சபை தொடர்பிலும் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் மத்தியில் அதிருப்திகளை ஏற்படுத்தியிருக்கின்றது. புலம்பெயர் சமூகத்தினர் மத்தியிலும் கேள்விகள் எழுந்திருக்கின்றன. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்பது ஒரு மாற்று அரசியல் தலைமையாக தொடர்ந்தும் இயங்கும் என்னும் வாக்குறுதியும் வழங்கப்பட்டது. மக்கள் மத்தியில் பொதுக் கட்டமைப்பு என்பது, ஒரு புதிய நம்பிக்கையாக நோக்கப்பட்டது. ஆனால், இதனை முன்கொண்டு செல்வதில் தமிழ் மக்கள் பொதுச் சபை போதிய ஆற்றலை கொண்டிருக்கவில்லையா?

எனினும், சிவில் சமூக அமைப்புக்கள் பலவும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தொடர வேண்டும் என்றே கருதுகின்றது. ஏனெனில், பொது வேட்பாளரை தோற்கடிக்கும் நோக்கில் செயல்பட்ட கட்சிகள் வெற்றிபெறக் கூடாது என்னும் கரிசனை சிவில் சமூக அமைப்புக்களிடம் உண்டு. நாம் அரசியலை கையாளாது விட்டால், அரசியல் நம்மை கையாளும் என்னும் கூற்றுண்டு. இந்த அடிப்படையில் சிவில் சமூக அமைப்புக்கள் அரசியலை கையாளாது விட்டால் அரசியல் கட்சிகள் தொடர்பில் எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாமல் போகும். அரசியலை வெறுமனே அரசியல் கட்சிகளிடம் விட்டுவிடக் கூடாது - அவ்வாறு விடுகின்ற போது, அரசியலில் ஒரு குறிப்பிட்ட தரப்பின் ஏகபோகமாகிவிடும். தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் பலவீனமடைந்து செல்வதற்கு இதுவே முக்கிய காரணம். எனவே இன்றைய அரசியலை கையாளும் பொறுப்பிலிருந்து சிவில் சமூகம் விலகிநிற்க முடியாது; விலகி நிற்கவும் கூடாது.

உடனடியாக வரக் கூடிய தேர்தலை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல் பொதுச் சபையிடம் இல்லையென்றால், குறித்த சபையில் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் காலப் பொருத்தமான முடிவை எடுப்பதற்கான சுயாதீனத்தை அங்கீகரிக்க வேண்டும். இன்றைய அரசியல் சூழல் மிகவும் நெருக்கடியானது. இந்தச் சூழலில், சிவில் சமூகமும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது கட்டாயமானது. தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டில் பெற்றுக்கொண்ட வெற்றி, சிவில் சமூகமும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தால், அதன் பலம் எத்தகையதாக இருக்கும் என்பதற்கான சிறந்த உதாரணமாகும்.

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை அபிவிருத்தி செய்ய சுவீடன் கவனம்

## பிரதமர் ஹரிணியுடன் தூதுவர் ஆலோசனை

கொழும்பு, ஒக். 06

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை அபிவிருத்தி செய்வதிலும், சுவீடனில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் மற்றும் வீசா சிரமங்களைக் குறைப்பது தொடர்பிலும் சுவீடன் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளதாக இலங்கைக்கான சுவீடன் தூதுவர் ஜேன் தெஸ்லெப் தெரிவித்தார்.



பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சுவீடன் தூதுவருக்கு இடையில் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுவீடன் அரசாங்கத்தின் முதலீடுகளின் போது, முதன்மையாக இலங்கையின் புதுப்பிக்கதக்க எரிசக்தித் துறையிலும், இலங்கையின் உணவுப் பாதுகாப்பிலும் சுவீடன் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இதன்போது, சுவீடனில் உள்ள இலங்கை மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் வீசா சிரமங்கள் குறித்து பிரதமர் ஹரிணி, சுவீடன் தூதுவரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார். (எ)

# இஸ்ரேல் - லெபனான் மோதல்களால் 32 இலங்கையர் தூதரகத்தில் தஞ்சம்!

பெய்ரூட், ஒக். 06

இஸ்ரேல் - லெபனான் இடையே நீடித்து வரும் மோதல் காரணமாக 32 இலங்கையர்கள் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

தூதரகம் அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருவதோடு, அந்தப் பகுதியிலுள்ள இலங்கையர்களுடன் தொடர்பைப் பேணி வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் இலங்கைப் பிரஜைகள் எவரும் பாதிக்கப்படவில்லை.

இதேவேளை, இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்கான விமானங்கள் வழமையாக இயங்க ஆரம்பித்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

ஈரானின் ஏவுகணைத் தாக்குதல்களால் இரண்டு நாட்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த டுபாய் மற்றும் அபுதாபியிலிருந்து இஸ்ரேலுக்கான விமானங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்குச் செல்லத் திட்டமிடுபவர்கள் விமான நிலையத்துக்குச் செல்வதற்கு முன் அவர்களின் விமானங்களின் நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சரிபார்க்குமாறு தூதரகம் அறிவுறுத்தியது.

இஸ்ரேல் முன்னெடுத்த தாக்குதல்களால் 127 குழந்தைகள் மற்றும் 261 பெண்கள் உட்பட 2,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# வேட்புமனு தாக்கல் தினங்களில் பட்டாசு கொளுத்துவதற்கு தடை

கொழும்பு, ஒக். 06

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் தினங்களில் வீதிகளில் பட்டாசுகளை கொளுத்தி மக்களை ஒடுக்கும் - அச்சுறுத்தும் வகையில் செயல்படுபவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

மேலும், பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் தினங்களில் வீதிகளில் ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அனுமதி பெற வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. செந்தில் வினோத்

# பேச, எழுத மறந்தோம்?

மொழிப் பயன்பாடு ஒரு தனி மனிதனின் குணத்தையும், தனித்துவத்தையும் வெளிப்படுத்தும் ஊடகமாக உள்ளது. பேசுவது எழுதுவதனால் மட்டுமே மொழியை வளர்ச்சியுறச் செய்து வளமாக்குகிறோம்.

கல்வி முறை மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப ஆதிக்கத்தால் இன்றைய தலைமுறையினர் பேசும் மற்றும் எழுதும் திறனை குறைந்து கொண்டு வருகிறது. விமர்சன சிந்தனை, படைப்பாற்றல், கற்பனை, பொது அறிவை பேச்சு மற்றும் எழுத்தாற்றல் மூலம் வெளிப்படுத்த முடியாத தலைமுறை உருவாகி வருகிறது.

பெரும்பாலானவர்கள் அறிதிறன் கைப்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர். மேலும் வேலை மற்றும் பிற நோக்கங்களுக்காக பலர் கணினிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வகையான இன்றைய கலாசார பழக்கம் விரைவாகப் படிக்கவும் எழுதவும் வேண்டிய தேவையைக் குறைத்து வருகிறது. குடும்பம், கல்வி நிறுவனம், வேலை செய்யும் இடம் மற்றும் பொதுவெளியில் கூடி, ஒருவருடன் கலந்துரையாடுவது என்பதே அரிதாக உள்ளது.

பேச்சைக் குறைத்துக் கொண்ட சமூகத்துக்கு 'முன்மாதிரி' என்பதாக ஜப்பான் உருவாகிவருகிறது. ஜப்பானில் இன்றைய தலைமுறையினர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது என்பது மிகவும் குறைந்துள்ளதாம். இவை நீடித்தால் அடுத்த 10 ஆண்டுகளில் 'பேசத் தெரியாத தலைமுறையாக' மனிதர்கள் மாறிவிடுவார்கள் என்று புதிய ஆய்வு முடிவுகள் நமக்கு அறைகூவல் விடுக்கின்றன.

விரிவான செய்திகளை ஆழமாக கவனித்துப் படித்த மக்கள் இன்று குறுஞ் செய்திகள், சுருள் செய்திகள், படங்களுடன் கூடிய துண்டுப் பிரசுரங்களைத் தான் விரும்புகின்றனர். அதற்கேற்றாற் போல் சமூக ஊடகங்களும் துண்டுச் செய்திகள், செய்தித் துளிகள், ஒரு நிமிட செய்திகள் என பல வடிவங்களில் காலத்திற்கு ஏற்ப கொடுத்து வருகின்றனர்.

செய்தித்தாள் வாசிப்பது என்பது நமது காலைக் கடமையாக கலாசாரத்தில் இருந்த பழக்கம் ஆகும். ஆனால் இன்றோ புத்தகங்கள், நாவல்கள், பெரிய கதைகள், கட்டுரைகள் வாசிப்பது குறைந்து டிஜிட்டல் மீடியாவில் இருந்து வரும், அடிக்கடி கவனச் சிதறல்களை ஏற்படுத்தும் முறைசாரா மொழி மற்றும் டிஜிட்டல் தகவல் தொடர்புகளில் சுருக்கமான செய்திகளே பெரும்பாலானோரின் கவனத்தை ஈர்க்கின்றன.

இந்தப் பழக்கமானது நீடித்தால் ஆழ்ந்த வாசிப்பு கலாசாரம் இல்லாமலே போய்விடக் கூடும். இன்பத்திற்காக வாசிப்பது என்பது இருந்தது. கைப்பேசி பரவலால் அது குறைந்தது. சராசரி மனிதர் புத்தக வாசிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறைந்தது. இணைய வழியில் தகவல்களை எளிதாக அணுகுதல் விரிவாகப் படிக்கவும்.பேசவும் எழுதவும் வேண்டிய தேவையைக் குறைக்கிறது.

கடிதங்கள் எழுதுவது, பண்டிகைகளில், பிறந்தநாளில் வாழ்த்து மடல்கள் அனுப்புவது இன்று நடைமுறையில் அறவே இல்லை. சமூக வலைதளங்களான வாட்ஸ்ஆப், ஃபேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றனர் இன்றைய தலைமுறையினர். சொந்தமாக கவிதை எழுதுவது, வாழ்த்து அனுப்புவது கிடையாது. தனக்கு வந்த செய்திகளைக் கூட முழுமையாக, ஆழமாகப் படிக்காமல் மற்றவர்களுக்கு அப்படியே தள்ளிவிடுகிறார்கள்.

இதற்கு ஒரு படி மேலாக ஓகே, யெஸ் என்ற ஓரிரு எழுத்துகள் கொண்ட சிறிய ஆங்கிலச் சொற்களைக் கூட சுருக்கி 'கே', 'எஸ்' என்று பதில் அனுப்புகிறார்கள். இதன் உச்சகட்டமாக யாரோ ஒருவர் உருவாக்கிய ஸ்டிக்கர், எமோஜிகளை பயன்படுத்துகிறார்கள். இது ஒரு வரம்பு வரை கேளிக்கையாகக் கூட இருக்கலாம். இது சமூகப் பழக்கமாக, சுபாவமாக மாறும்போது, மொழியின் மீது இதன் தாக்கம் வேறு மாதிரியாகிறது.

நம் சிந்தனையை, வார்த்தைகளை, கற்பனைத் திறனை வெளிப்படுத்த முடியாத சமூகமாக மாறி வருகிறோம். இந்த முறையான தகவல் பரிவர்த்தனை கலந்துரையாடல் பேச நினைப்பதை எழுத்து வடிவத்தில் வெளிப்படுத்தாமல் போவது இரண்டு உறவுகள் இடையே பெரும் எதிர்பார்ப்பையும், ஏமாற்றத்தையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

செயற்கை நுண்ணறிவு சமூகமாக மாறிக் கொண்டிருக்கும் நாம் ஒரு தகவலைப் பெற எழுத, பேச வேண்டாம் - அதற்கான வினாவைப் பதிவிட்டால் போதும். விடுப்புக் கடிதத்தில் இருந்து அலுவலக கோப்புகள் வரை செயற்கை நுண்ணறிவு தொழிநுட்பம் அதுவாகவே தயார் செய்து நமக்கு அளிக்கிறது. இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

இன்றைய தலைமுறையினர் அதிகம் பேசவும், எழுதவும் முற்றிலுமாக மறந்துவிடவில்லை என்றாலும், அவர்களின் பழக்க வழக்கங்களும், விருப்பங்களும் மாறிவிட்டன. சோதனை, மனப்பாடம் மற்றும் கற்கும் கற்றல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் கல்வி முறை இன்று நடைமுறையில் உள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் கணிதம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தவும், மொழி மற்றும் கலைகளில் ஆர்வம் குறைவாக உள்ளது.

நேருக்கு நேர் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் எழுத்து பூர்வமான தகவல் தொடர்புகளுக்கு மீண்டும் முக்கியத்துவம் அளிக்க நாம் முனைப்பு காட்ட வேண்டும். தானியங்கி முறையில் மொழித் திருத்தம் மற்றும் இலக்கண சரிபார்ப்பு போன்றவற்றுக்கான மென்பொருள்களை நம்பி இருத்தலை குறைத்துக் கொண்டு, பேசும், எழுதும் திறனை வளர்க்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

எதிர்கால சமுதாயத்தினர் தங்களின் கற்பனைத் திறனை, எண்ணங்களை சொந்த நடையில் பிரதிபலிக்க வழிவகை செய்வோம். ஒட்டுமொத்த சமூக, கலாசாரத்தின் மேம்பாட்டுக்காக, தொழில்நுட்பப் பயன்பாடு, பேச்சு, எழுத்துத் திறன் ஆகியவற்றுக்கு இடையே சம நிலையை உருவாக்குவோம்.

## இந்தவார ராசிபலன் 06.10.2024 - 12.10.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 20
நல்ல நேரம்: 3.02 - 4.32 ராகு காலம் : 04.32 - 06.02 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் போதுமான தனவரவு இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். அன்பு மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். ஆழ்ந்த மனக் கவலைகள் அன்பு மனைவியின் அரவணைப்பால் குறையும். குழந்தைகளின செயல்பாடு கண்டு உங்கள் முகத்தில் புன்னகையும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான பணவரவு அதிகரித்து மனமகிழ்ச்சி கூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், பெரிய மனிதர்களின் பாசமும் நட்பும் கிடைக்கும். சிலருக்கு வியாபாரப் போட்டிகள் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். விற்பனைப் பிரதிநிதிகள் தங்கள் தனித்திறமைகள் புதிய இலக்குகளை எட்டி அதிக இன்சென்டிவ், பாராட்டு பெறுவர். பணிபுரியும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். சிலருக்கு அலைச்சல்கள் ஏற்படலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனமகிழ்ச்சி, பகையை வெல்லும் திறன் ஆகியவை ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன் பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். தொலை தூரச் சுபச்செய்திகளை எதிர்பார்க்கலாம். வாழ்க்கையில் நற்பலன்களை எதிர்பார்க்கலாம் இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பதவி உயர்வும் எதிர்பார்க்கலாம். கோபத்தை அடக்கிக் குடும்பத்துடன் ஒத்துப் போவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் செல்லவும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறி தனவரவும், இலாபமும் அதிகரிக்கும். எடுத்த முயற்சிகள் யாவும் அனுகூலமாக முடியும். தொடர் முயற்சி காரணமாக, வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறை வேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். வியாபாரிகளுக்கு திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பெண்களுக்கு பணியிடத்தில் மற்றவர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப்பெரிய சாகசங்களை புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்துகொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீடு, கடை வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேறம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர - தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியும் எதிரணியின் குழப்பமும்!



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக்காக அலைந்த களைப்பு போவதற்கு முன்னதாக அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலுக்கு தயாராக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டன. குறிப்பாக, பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களில் தோல்வியடைந்தவர்களின் கட்சிகள் தோல்வியின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கு முன்னதாக மீண்டும் தேசிய தேர்தல் ஒன்றை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

புதிய ஜனாதிபதி அநுராகுமார திசாநாயக்க தேர்தல் பிரசாரங்களின் போது நாட்டு மக்களுக்கு உறுதியளித்ததைப் போன்று பதவியேற்ற மறுநாளே பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார். கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நிறைவடைகின்றன. தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்த மக்களிடம் திசாநாயக்க தனது ஆட்சியை உறுதியான முறையில் முன்னெடுப்பதற்கு வசதியாக தேசிய மக்கள் சக்தி பலம்பொருந்திய அரசாங்கத்தை அமைப்பதற்கு பாராளுமன்ற தேர்தலில் அமோகமான வெற்றியைத் தருமாறு கேட்பார்.

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையின் அடிப்படையில் நோக்கும்போது பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப்பெரும்பான்மைப் பலம் கிடைப்பது சாத்தியமில்லை என்று முன்கூட்டியே மதிப்பீடுகளை வெளியிடுகிறவர்களும் இருக்கிறார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மூன்று பிரதான வேட்பாளர்களுக்கு கிடைத்த வாக்குகள் பாராளுமன்ற தேர்தலில் அவர்களின் கட்சிகளுக்கு கிடைக்கப் போவதில்லை. அதனால் அந்த மதிப்பீடுகள் பெருமளவுக்கு பொருத்தமானவை அல்ல. அத்துடன் இரு தேசிய தேர்தல்களிலும் ஒரே மாதிரியான காரணிகள் முழுமையாகச் செல்வாக்கு செலுத்துவதில்லை.

ஜனாதிபதி திசாநாயக்க ஐம்பது சதவீதமான வாக்குகளை பெறமுடியவில்லை என்றபோதிலும், மக்கள் மாற்றம் ஒன்றுக்காகவே அவருக்கு வாக்களித்தார்கள். மாற்றத்துக்கான வேட்பாளராக திசாநாயக்கவை அடையாளம் கண்டு வெற்றிபெறவைத்த மக்கள் அவர் உறுதியான அரசாங்கத்தை அமைத்து தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு போதுமான ஆதரவை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குவார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுபவரின் கட்சியே அரசாங்கத்தை அமைக்கக்கூடியதாக பாராளுமன்ற தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பது வழமையாகும். அதுவும் இந்த தடவை பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மீது மக்கள் கடுமையான வெறுப்பைக் கொண்டிருக்கும் பின்புலத்தில் ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் கிடைத்த வாக்குகளையும் விடவும் கூடுதலான வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் தாராளமாக இருக்கின்றன.

2019 ஜனாதிபதி தேர்தலில் 3.16 சதவீதமான வாக்குகளைப் பெற்ற திசாநாயக்க இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஐம்பது சதவீதமான வாக்குகளைப் பெறுவதற்கு பிரமாண்டமான பாய்ச்சலை செய்வது சாத்தியமில்லை என்றே பரவலாக நம்பப்பட்டது. ஆனால் அரசியல் என்பது கணிதம் அல்ல சமூக விஞ்ஞானம் என்று கூறிய திசாநாயக்க நாட்டில் பரவலாக தேசிய மக்கள் சக்திக்கு அதிகரித்துவந்த பெரும் ஆதரவின் அடிப்படையில் தனது வெற்றியில் திடமான நம்பிக்கை கொண்டவராகவே இருந்தார்.

இரு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி திசாநாயக்க சாதித்துக் காட்டியதைப் போன்று இலங்கையின் முன்னைய வேறு எந்த அரசியல் தலைவரும் செய்ததில்லை என்று கூறினால் அது மிகையில்லை. முன்னைய ஜனாதிபதி தேர்தலில் தனக்கு கிடைத்த வாக்குகளின் சதவீதத்தை விடவும் 14 மடங்கு பாய்ச்சலை ஒரு ஐந்து வருடங்களுக்குள் செய்து அவர் சாதித்த வெற்றி இலங்கையில் மாத்திரமல்ல, உலகின் வேறு பாகங்களிலும் கூட முன்னென்றும் கண்டிராததாகும் என்றுகூட சில அவதானிகள் வர்ணிக்கிறார்கள்.

ஐக்கிய முன்னணி என்ற பழைய வாகனம் இல்லாமல் இடதுசாரி கட்சியொன்றினால் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்று காட்டிய பெருமையும் ஜனாதிபதி திசாநாயக்கவையே சாரும். கடந்த நூற்றாண்டில் மிகவும் பெரிய கட்சியாக விளங்கிய ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக இடதுசாரி கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்தே சிறிலங்கா சுதந்திர கட்சி ஆட்சியைப் பிடிக்கக்கூடியதாக இருந்தது. அந்த கட்சி ஒருபோதும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு அதிகாரத்துக்கு வந்ததில்லை. பழைய இடதுசாரி கட்சிகள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு சுதந்திர கட்சியுடனான கூட்டணியையே நம்பியிருந்தன.

அந்த இடதுசாரி கட்சிகள் எல்லாம் வரலாறாகிவிட்ட நிலையில் இன்று தேசிய மக்கள் சக்தி தனியாக நின்று தேர்தலில் வெற்றி பெறக்கூடிய ஒரு சக்தியாக மாறியிருப்பது இலங்கை அரசியலில் ஒரு மைல்கல்லாகும். தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் இருக்கலாம். அது வேறு விடயம். ஆனால், இங்கு அதன் தேர்தல் சாதனை மீதே கவனம் செலுத்தப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியையோ, சிறிலங்கா சுதந்திர கட்சியையோ அல்லது ராஜபக்சாக்களின சிறிலங்கா பொதுஜன பெரமுனவையோ பிரதான கட்சிகள் என்று இனிமேல் அழைப்பது பொருத்தமில்லை. அவை தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தக் கூடியவையாக இல்லை. கூட்டணி அமைப்பதற்கு இந்த கட்சிகளைத் தேடி மற்றைய கட்சிகள் வந்த காலம்போய் இப்போது மற்றைய கட்சிகளைத் தேடி இவற்றின் தலைவர்கள் ஓடுகிறார்கள். ஆனால் அவர்களுடன் கூட்டணி அமைக்க குறிப்பிடத்தக்க செல்வாக்கு மிக்க வேறு எந்த கட்சியும் முன்வருவதாகவும் இல்லை.

ஆளும் கட்சியாக தேசிய மக்கள் சக்தியும் பிரதான எதிர்க்கட்சியாக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் வெளிக்கிளம்பியிருக்கும் புதியதொரு அரசியல் கோலத்தையே இன்று காண்கிறோம்.

பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனடியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டுச் சேருவதற்கு அழைப்பு விடுத்தது. பிரேமதாசவும் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளை சேர்த்துப்பார்க்கும்போது இரு கட்சிகளும் கூட்டணி சேர்ந்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அடுத்த அரசாங்கத்தை அமைக்கலாம் என்ற எதிர்பார்ப்பே அதற்கு காரணமாகும்.

ஆனால், பிரேமதாச அந்த அழைப்பை நிராகரித்து விட்டார். விக்கிரமசிங்க தலைவர் பதவியில் இருந்து விலகினால் பிரேமதாசவின் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சியை தாங்கள் பொறுப்பேற்கத் தயாராயிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சில தலைவர்கள் கூறினார்கள். இனிமேல் தேர்தல்களில் போட்டியிடப்போவதில்லை என்று விக்கிரமசிங்க அறிவித்திருந்தாலும், கட்சியின் தலைமைத்துவத்தை உடனடியாக அவர் கைவிடுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. ஐக்கிய தேசிய கட்சியுடனான கூட்டணியை தவிர்ப்பதற்காகவே அவர் இணங்கமுடியாத அந்த நிபந்தனையை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் முன்வைத்தனர் போலும்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன உட்பட பல கட்சிகளில் இருந்து வெளியேறி வந்து ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரித்தவர்கள் பாராளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடவிருப்பதாக கூறப்பட்டது ஆனால், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் வேறு பலரும் மக்கள் ஐக்கிய சுதந்திர கூட்டணி என்ற பெயரில் வேறு ஒரு பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானத்திருப்பதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. இறுதியில் ஐக்கிய தேசிய கட்சியும் வேறு குழுக்களுமே சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் என்று தெரிகிறது.

ராஜபக்சாக்களை கைவிட்டு விக்கிரமசிங்கவுடன் சேர்ந்தவர்களினால் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. ராஜபக்சாக்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்ததைப் போன்றே அவர்களுடன் சேர்ந்தவர்களும் மக்களினால் கடுமையாக வெறுக்கப்படுகிறார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் தெளிவாக வெளிக்காட்டின.

இதனிடையே, முன்னாள் அமைச்சர்கள் சிலர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு முடிவெடுத்திருக்கிறார்கள். ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன, உதவி தலைவர் அகில விராஜ் காரியவாசம் போனறவர்களும் கூட தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. அவர்கள் எல்லோரும் தங்களது அரசியல் எதிர்கால வாய்ப்புக்களுக்காக ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவின் வெற்றியை மாத்திரமே நம்பிக்கொண்டிருந்தார்கள். அவர் தோல்வியடைந்ததும் அவர்களின் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்பட்டுவிட்டன.

எதிரணிகளுக்குள் தோன்றியிருக்கும் குழப்பநிலை தேசிய மக்கள் சக்திக்கு முன்னரை விடவும் அனுகூலமான அரசியல் சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றன. குறுகிய காலத்துக்குள் பாராளுமன்ற தேர்தலை அறிவித்ததன் மூலம் ஜனாதிபதி திசாநாயக்க எதிரணிக் கட்சிகளை தடுமாற வைத்துவிட்டார் என்றே தோன்றுகிறது.

இது இவ்வாறிருக்க, பொதுவாழ்வில் ஒரு தூய்மையைப் பேணவேண்டும் என்றும் மக்களின் நலன்களுக்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றும் அக்கறை கொண்டவர்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதற்கு இந்த தடவை மக்களுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இதுவரையில் அதிகாரத்தில் இருந்த சகல கட்சிகளும் ஊழல்தனமான அரசியல்வாதிகளினால் நிறைந்து கிடக்கின்றன. அவர்களில் பெரும்பான்மையானவர்களை தவிர்த்துவிட்டு முற்றிலும் புதியவர்களை வேட்பாளர்களாக நியமிப்பது அந்த கட்சிகளைப் பொறுத்தவரை சாத்தியமில்லை.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அனேகமாக முற்றிலும் புதியவர்களை வேட்பாளர்களாக நியமிக்கக்கூடிய வாய்ப்பு தாராளமாக இருக்கிறது. நல்ல கல்வித் தகைமையும் மக்களின் நலன்களில் அக்கறையும் கொண்ட இளம் வேட்பாளர்களை களமிறக்குவதில் தேசிய மக்கள் சக்தி அக்கறை காட்டும் என்பது நிச்சயம். இதுகாலவரையில் அவர்கள் ஆட்சியதிகாரத்தில் இருக்காத காரணத்தால் அத்தகைய புதிய வேட்பாளர்களை அடையாளம் காண்பதிலும் அவர்களுக்கு சிரமமில்லை.

அதனால், மற்றைய கட்சிகளும் புதிய முகங்களை களத்தில் இறக்குவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம். ஆனால் அந்த

(14ஆம் பக்கம் பார்க்க)



பாராளுமன்ற தேர்தலில் ஒரு மாற்றத்துக்காக தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்கு வாக்களித்தால் என்ன என்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்களில் சில பிரிவினர் மத்தியில் யோசனை கிளம்புகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறுமா தமிழக வெற்றிக் கழகம்?

- பி. ஜெபலின் ஜான்

அரசியலில் புதிய வரவான நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக் கழகம், தமிழ்நாட்டு அரசியல் களத்தில் எந்த அளவுக்கு பரிணமிக்கும் என்ற விவாதம் பரவலாகி உள்ளது.



தமிழக அரசியல் உலகைப் பொருத்தவரை, திரைத் துறையில் இருந்து அரசியலில் களமிறங்கியவர்களின் பட்டியல் தொடர்ந்து நீள்கிறது. எம்ஜிஆர், சிவாஜி, ஜெயலலிதா, எஸ்.எஸ். ராஜேந்திரன், விஜய டி.ராஜேந்தர், கே. பாக்யராஜ், ராமராஜன், சரத்குமார், விஜயகாந்த், சீமான், கமல்ஹாசன், கார்த்திக், குஷ்பு, உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் வரிசையில் விஜய் இணைந்துள்ளார். இவர்களில் ஒருசிலரைத் தவிர மற்றவர்கள் ஏதாவது ஒரு கட்சியில் உறுப்பினராக இருந்தவாறு தங்களை பொதுவாழ்வில் அடையாளப்படுத்திக் கொண்டவர்கள்.

எம்ஜிஆரை பொருத்தவரை 1957, 1962, 1967, 1971ஆகிய தேர்தல்களில் திமுகவுக்காக சுழன்று பணியாற்றியவர். நடிகராக இருந்த எம்ஜிஆர், திமுகவின் சட்டமேலவை உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர், சிறுசேமிப்புக் குழு துணைத் தலைவர், திமுக பொருளாளர் என 20 ஆண்டுகள் திமுகவில் பயணம் செய்து, திமுகவிலிருந்து நீக்கப்பட்டதால் அதிமுகவை தொடங்கி ஒரே தேர்தலில் ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்தவர்.

அதிமுகவில் கொள்கை பரப்புச் செயலர், மாநிலங்களவை உறுப்பினர், சத்துணவுத் திட்ட உறுப்பினர் என ஜெயலலிதாவும் அதிமுகவில் வலம்வந்து எம்ஜிஆருக்கு பின்னர் அவரது பிம்பத்தைப் பயன்படுத்தி கட்சியையும், ஆட்சியையும் பிடித்து கோலோச்சியவர். எனவே, எம்ஜிஆர், ஜெயலலிதாவுடன் நடிகர் விஜயை ஒப்பிட முடியாது. விஜயகாந்த், கமலுடன் வேண்டுமானால் விஜயை ஒப்பிடலாம்.

விஜயகாந்தை பொருத்தவரை எந்தக் கட்சியிலும் அவர் உறுப்பினராக இருந்தது இல்லை. எம்ஜிஆர் ரசிகர், கருணாநிதி, ஜி.கே.மூப்பனாரின் அனுதாபி என்ற பிம்பத்தைக் கொண்டவர். நடிகர் சங்கத் தலைவராக இருந்து சாதித்த விஜயகாந்துக்கு, தமிழகம் முழுவதும் கட்டமைப்பு கொண்ட ரசிகர் மன்றமும் இருந்தது.

தொடக்க காலத்தில் இருந்தே ஏழைகளுக்கு உதவி செய்யக்கூடிய பிம்பம் விஜயகாந்த் மீது இருந்தது.

இதையெல்லாம் கடந்து, 1998, 1999, 2001, 2004 என தொடர் வெற்றி வளையத்தில் இருந்த பாமகவை எதிர்த்ததால்தான் 2006 பேரவைத் தேர்தலில் விஜயகாந்தால் வாக்கு வங்கியை உயர்த்த முடிந்தது. பாமக வலுவாக இருந்த விருத்தாசலத் தில் வெற்றியும் பெறமுடிந்தது.

விழுப்புரம், சிதம்பரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை பகுதிகளில் அதிக வாக்குகள் பெற்ற விஜயகாந்தால், பாமக செல்வாக்கு இல்லாத டெல்டா, தென்மாவட்டங்கள், நகரப் பகுதிகளில் குறைவான வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது.

மேலும், விஜயகாந்த் மாற்று சக்தியாக களத்துக்கு வரும்போது, மாற்றத்துக்கான தலைவராக யாரும் இல்லை. கருணாநிதி-ஜெயலலிதா இருந்தபோதே களத்துக்கு வந்தது அவருக்கு சவாலாக இருந்தது. அவருக்கு தெலுங்கு தாய்மொழியைக் கொண்டவர்களின் ஆதரவும் பலமாக இருந்தது, கருப்பு எம்ஜிஆர் பிம்பம் உள்ளிட்டவற்றால் முதல் தேர்தலில் 8.3 சதவீத வாக்குவங்கி பெறமுடிந்தது.

கமலை பொருத்தவரை முதலில் சந்தித்தது 2019 மக்களவைத் தேர்தல். பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்த முடியாத அவரால், அரசியல் களத்தில் யாரை எதிர்த்து வருகிறோம் என்பதைச் சரியாக பதிவு செய்ய முடியவில்லை. கடைசி நிமிஷம் வரை தனித்து நிற்கிறோமா அல்லது திமுக கூட்டணியில் இணைந்து செயல்படப் போகிறோமா என்ற குழப்பத்தில் இருந்தார் கமல்.

இந்தக் குழப்பத்தையும் மீறி பிராமணர்கள், சௌராஷ்டிரம், தெலுங்கு பேசுவோர் நிறைந்து வாழும் தென்சென்னை, மத்திய சென்னை, வடசென்னை, சிறிபெரும்புதூர், கோவை, மதுரை மக்களவைத் தொகுதிகளில்தான் அதிக வாக்குகள் கிடைத்தன. கருணாநிதி, ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அரசியலுக்கு வந்தாலும், சரியான கொள்கையை முன்னிறுத்தாது, கட்டமைப்பு இல்லாதது உள்ளிட்டவற்றால் 3.78 சதவீத வாக்குகளை மட்டுமே கமலால் பெறமுடிந்தது.

விஜயை பொருத்தவரை திரையுலகில் ரஜினிக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய நடிகராக அறியப்படுகிறார். இவரது மன்றத்துக்கு, ஓரளவு வட மாவட்டங்களில் வரவேற்பு உள்ளது. ஆனால், தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் மன்றம் வலுவாக உள்ளதா என்பது உற்று கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். குறிப்பாக கிறிஸ்தவ, ஆதிதிராவிட இளைஞர்கள் மற்றும் அனைத்து சமூக இளம்பெண்களிடம் விஜய்க்கு ரசிகர்கள் அதிகம் உள்ளனர்.

கருணாநிதி, ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு தேர்தலை சந்திக்க வருவதும், பேரவைத் தேர்தலை நேரடியாகச் சந்திக்க வருவதும் விஜய்க்கு அமைந்த நல்வாய்ப்பு.

தமிழக அரசியலில் ஜெயலலிதா, கருணாநிதி மறைவுக்குப் பிறகு அனைத்துப் பிரிவு மக்களையும் ஈர்க்கும் பெரும் தலைவர்கள் இல்லை என்பது உண்மைதான். இருந்தாலும், விஜயகாந்த் வந்தபோது திமுக-அதிமுகவுக்கு ஒரே மாற்றாக தேமுதிக இருந்த நிலையில், இப்போது பாஜக தலைமையிலான கூட்டணி, நாம் தமிழர் கட்சி என இரண்டு மாற்றுகள் உள்ளன. அவற்றைத் தாண்டித்தான் விஜயால் வாக்குகளைப் பெறவேண்டிய கட்டாய நிலை உருவாகும்.

ஆந்திர துணை முதல்வர் பவன்கல்யாண் போல தமிழக அரசியலில் விஜய் சாதிப்பார் என தவெக ஆதரவாளர்கள் கூறுகின்றனர். வாக்குவங்கியை நிரூபிக்காத கட்சியுடன், எந்தவொரு பெரிய கட்சியும் கூட்டணி வைக்குமா என்பது கேள்விக்குறிதான். 2019 மக்களவைத் தேர்தலில் 5.5 சதவீத வாக்குவங்கியை பவன்கல்யாண் நிரூபித்த பின்னர்தான் சந்திரபாபு நாயுடு அவருடன் கூட்டணி வைத்தார்.

விநாயகர் சதுர்த்திக்கு வாழ்த்து சொல்லாமல், பெரியார் ஈ.வெ.ரா. பிறந்த தினத்தின்போது பெரியார் திடலுக்கு விஜய் சென்றது தவெகவும் மற்றொரு திராவிடக் கட்சிதான் என்ற பிம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. திராவிட கருத்தியலை தீவிரமாகப் பேசும் திமுக, மென்மையாகப் பேசும் அதிமுக ஆகியவை ஏற்கெனவே பலமான வாக்கு வங்கியை வைத்திருக்கின்றன.

எத்தனையோ குழப்பம் இருந்தாலும் எடப்பாடி பழனிசாமி தலைமையில் 23 சதவீத வாக்குகளை அதிமுக பெற்றிருக்கும் நிலையில் அந்த வாக்குகளை விஜய் பெறுவது அத்தனை சுலபம் அல்ல. தமிழ் தேசிய கருத்தியலை முன்னிறுத்தும் நாம் தமிழர் கட்சி, 2016 பேரவைத் தேர்தல் முதல் 2024 மக்களவைத் தேர்தல் வரை 1.1 சதவீதத்தில் இருந்து 8.22 சதவீதமாக தொடர்ந்து வாக்குவங்கியை உயர்த்திவரும் நிலையில், இளம் வாக்காளர்கள் நிறைந்த அந்த கட்சியின் வாக்கு வங்கியையும் அவரால் கரைக்க முடியுமா என்பது

இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் வர இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலின்போது விஜய் கடைப்பிடிக்கும் உத்தியைப் பொருத்து தான் தெரியும்.

# செந்தில் பாலாஜியும் 4.34 லட்சம் விசாரணைக் கைதிகளும்!

எம். பாண்டியராஜன்

நீதிதேவன் மயக்கம் - திராவிடர் கழகத்தில் இருந்த காலத்தில், அண்ணா எழுதிய எண்ணற்ற நாடகங்களில் ஒன்று.

இராவணனை இரக்கமற்ற அரக்கன் என்று குறிப்பிட்ட கம்பருக்கு எதிரான வழக்கில் மேல் உலகத்தில் நீதிதேவன் முன் நடக்கும் விசாரணையில் தன் தரப்பில் இராவணனே வந்து வாதிடுகிறான். அடுக்கடுக்கான வாதங்கள் என்ற பெயரில் புராணங்களில் கூறப்படும் விஷயங்களுக்கு எதிராக இராவணனுக்குள் தான் புகுந்து கேள்விகளை எழுப்புவார் அண்ணா. கடைசியில் இராவணனின் கேள்விகளுக்கு விடை தெரியாமல் மயங்கிச் சாய்வார் நீதிதேவன் - இதுதான் சுருக்கக் கதை!



இதைப் புராண நம்பிக்கைகளுக்கு எதிரான திராவிட இயக்கப் பிரசார நாடகம் எனலாம். இப்போது இந்தப் புத்தகம் அச்சில் இருக்கிறதா, விற்பனைக்குக் கிடைக்கிறதா, பவள விழாக் காலத்தில் தி.மு.க.வின் இளைய தலைமுறையில் எவ்வளவு பேருக்கு இந்த நூலைத் தெரியும்? எத்தனை பேர் படித்திருப்பார்கள்? சொல்வதற்கில்லை.

நீதி என்றுமே சும்மா நினைவுக்கு வந்த ஒரு விஷயம் இது, அவ்வளவுதான். மற்றபடி நீதிதேவன் மயக்கத்துக்கும் இனி வரும் விஷயத்துக்கும் எந்தவிதத் தொடர்பு மில்லை.

தமிழ்நாட்டில் அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி பண மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு, 15 மாதங்கள், மிகச் சரியாகச் சொன்னால் 471 நாள்கள் சிறை வைக்கப்பட்டு (சிறையில் இருந்த காலத்திலேயே இதய அறுவைச் சிகிச்சையெல்லாமும் நடந்தது), சில நாள்களுக்கு முன் உச்ச நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை எவ்வளவு காலம் நடைபெறும்? எப்போது தீர்ப்பு வரும்? தொடர்ந்து, ஏதாவதொரு தரப்பின் மேல் முறையீடுகள் எல்லாம் விசாரிக்கப்பட்டு குற்றம் சாட்டப்பட்டவர் எப்போது தண்டிக்கப்படுவார்? அல்லது விடுவிக்கப்படுவார்? ஒருவருக்கும் தெரியாது, ஒருவராலும் உறுதியாகக் கூற முடியாது.

வழக்கு விசாரணையில் ஒரு முன்னேற்றமும் இல்லாமல் இவ்வாறு நீண்ட காலம் சிறையில் இருந்துவிட்டுப் பிணையில் வெளிவருவதில் செந்தில் பாலாஜி ஒன்றும் புதியவரல்ல. இவரைப் போல இந்தியாவில் நிறைய பேர் இருக்கிறார்கள்.

இதேபோலத்தான், 2 ஜி ஊழல் வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. இராசா கைது செய்யப்பட்டு, செந்தில் பாலாஜியைவிட சில நாள்களே குறைவு - 466 நாள்கள் - சிறையில் இருந்துவிட்டுப் பின்னர் பிணையில் வெளியே வந்தார். இதே வழக்கில் கனிமொழியும் ஆறு மாதங்கள் சிறையில் இருந்துவந்தார். கடைசியில் நீதிமன்றத்தில் இந்த வழக்கே நிற்கவில்லை அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்!

ஐஎன்எக்ஸ் மீடியா வழக்கில் நாட்டின் முன்னாள் நிதியமைச்சரான ப. சிதம்பரம் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டார் 106 நாள்கள் கழித்து உச்ச நீதிமன்றம் அளித்த பிணையில் அவர் வெளிவரும்போது ஒரே ஒரு குற்றச்சாட்டுகூட பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இவர்கள் எல்லாம் இந்தியா முழுக்க அல்லது தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் அறிந்த, தெரிந்த மிகச் சிலர். ஆனால், இப்படியெல்லாம் சொல்லிக் கொள்ள முடியாத - எத்தனையோ மாறுபட்ட வழக்குகளில் சிக்கி - இப்போதும் இந்தியாவின் சிறைகளில் விசாரணைக் கைதிகளாகவே இருந்துகொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்?

தேசிய குற்றப் பதிவுகள் அமைப்பின் (நேஷனல் கிரைம் ரெகார்ட்ஸ் ப்யூரோ - என்சிஆர்பி) கணக்கின் படி, 2022, டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரம்:

இந்தியா முழுவதுமுள்ள சிறைகளில் 4 லட்சத்து 34 ஆயிரத்து 302 பேர் விசாரணைக் கைதிகளாக இருக்கின்றனர். சிறைகளிலுள்ள கைதிகளின் மொத்த எண்ணிக்கையான 5 லட்சத்து 73 ஆயிரத்து 220 பேரில், இவர்கள் மட்டுமே 76 சதவிகிதம்! (தில்லி திகார் சிறையில் இருக்கும் கைதிகளில் 90 சதவிகிதத்தினர் விசாரணைக் கைதிகள்தானாம்).

கடைசியாக வெளியான தேசிய குற்றப் பதிவுகள் அமைப்பு தொகுத்தளித்த, 2022 ஆம் ஆண்டுக்கான 'இந்திய சிறை புள்ளிவிவரங்களை' மேற்கோள் காட்டி, இந்த ஆண்டு பிப்ரவரியில் நாடாளுமன்றத்தில் பதிலளித்த மத்திய உள்துறை இணையமைச்சர் அஜய் குமார் மிஸ்ர, 5 ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணைக் கைதிகளாக 11,448 பேர் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

மூன்றிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை 25,869 பேர், இரண்டு முதல் மூன்றாண்டு வரை 33,980 பேர், ஓராண்டு முதல் இரண்டாண்டு வரை 63,502 பேர் சிறையில் விசாரணைக் கைதிகளாக இருப்பதாகவும் அமைச்சர் கூறினார் - ஆக, ஓராண்டுக்கும் மேலாக விசாரணைக் கைதிகளாக இருப்பவர்கள் மட்டுமே 1,34,799 பேர்! (இன்றைய சிறை நிலவரம் பற்றித் தெரியவில்லை, இரு ஆண்டுகளுக்குப் பிறகு தெரிவிக்கப்படலாம்).

இப்படியாக விசாரணைக் கைதிகளால் நிரம்பிவழியும் சிறைகளைக் கொண்ட நாட்டில் - கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இரு வேறு தருணங்களில் - வழக்குகளில் - பிணைதான் விதி, சிறை என்பது விதிவிலக்கு என்று தெரிவித்திருக்கிறது உச்ச நீதிமன்ற அமர்வுகள்! உபா வழக்குகளுக்கும் பண மோசடி வழக்குகளுக்கும் கூட இது பொருந்தும் என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

குற்றமிழைத்தவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவதில் எவ்வித மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க முடியாது ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற நிலையிலேயே மாதக்கணக்கில் தண்டனையைப் போலவே சிறை வைக்கப்படுவதில் என்ன நீதி இருக்கிறது என்பதுதான் புரியவில்லை.

எத்தனையோ சம்பவங்களைத் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நீதிமன்றங்களின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய ஒற்றுமையை ஒன்றுபட்டு நிலைநாட்டுவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் நவம்பர் 14!

பனங்காட்டான்

ஒரு பெருந்திருவிழா முடிந்து அதன் சலசலப்பு நிறைவடைவதற்குள் அடுத்த மகோற்சவத்துக்கான கொடியேற்றம் ஆரம்பமாகிவிட்டது. உற்சவகாரர்களின் போட்டியும் அடிபாடும் பகிரங்கமாகக் காணப்படுகிறது.

ஊழல்களைக் களையும் புதிய ஆட்சி என்ற மகுட வாசகத்துடன் புதிய ஜனாதிபதியாக தோழர் அநுர குமார திஸ்ஸநாயக்க அமைதித் தோற்றத்துடன் தமது நிகழ்ச்சி நிரலை படிப்படியாக நிறைவேற்ற ஆரம்பித்துள்ளார்.


தனது மகன் சிறுவனாகவிருக்கும் போது குழந்தைப் பிக்குவாக அவனை அனுப்புமாறு ஒரு பௌத்த பிக்கு கேட்ட வேளையில் அதனைத் தான் மறுத்ததாகவும், பின்னர் ஒரு சோதிடர் தனது மகனின் சாதகத்தைப் பார்த்துவிட்டு 'இவன் ஒரு நாள் அரசாள்வான்' என்று கூறியதாகவும், அவ்வாறே அவன் வந்துள்ளதாகவும் அநுர குமாரவின் தாயாரான 86 வயது ஷீலாவதி ஒரு செவ்வியில் தெரிவித்த விடயம் இப்போது வைரலாகியுள்ளது.

அந்தச் சோதிடன் சொன்னதுபோல அரசாளும் பதவி கிடைத்திருப்பினும் கௌரவ, மாண்புமிகு, மேன்மை தங்கிய என்று அழைக்காமல் தம்மை 'தோழர் ஜனாதிபதி' என அழைக்குமாறு மார்க்ஸிச வழிவந்த அநுர குமார கூறியிருப்பதாக அவரது தோழர்கள் ஊடகச் செவ்விகளில் தெரிவித்து வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் இவர் கூறிய கூற்று (பொன்மொழி), "எங்களைப் புதைத்துவிட்டதாக அவர்கள் எண்ணினார்கள். ஆனால், நாங்கள் விதைகள் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை" என்பதாகும். "விதை முளைத்தால் மரம், இல்லையேல் உரம்" என்ற விடுதலைப் புலிகளின் காலத்து வாசகத்தை இவரது கூற்று ஒத்திருக்கிறது.

அநுர குமாரவின் தாய் அமைப்பான ஜே.வி.பி. 1971ல் சேகுவேரா புரட்சியை மேற்கொண்டது. இந்திய பிரதமர் இந்திரா காந்தியின் உதவியுடன் இலங்கைப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க இதனை முறியடித்ததோடு, ஜே.வி.பி.யின் ஸ்தாபகரான றோகண விஜேவீர உட்பட பல நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்து குற்றவியல் நீதி ஆணைக்குழு முன் நிறுத்தி ஆயுட் தண்டனை வழங்கியது. அப்போது றோகண விஜேவீர பின்வருமாறு தெரிவித்திருந்தார்: "நாங்கள் கொல்லப்படலாம். ஆனால், எங்கள் குரல்கள் ஒருபோதும் சாகாது" (We may be killed. But our voices will never die) என்பதன் நவயுக வடிவமாக அநுர குமாரவின் வாசகம் அமைந்துள்ளது.





தேர்தல் நடைபெற்றபோது இவர்களின் கட்சியின் எம்.பிக்களாக இருந்த மூவரும் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் பதவிகளைப் பெற்று நாற்பத்தைந்துக்கும் அதிகமான அமைச்சுகளைப் பங்கிட்டுள்ளனர். முன்னைய ஆட்சியாளர்களிடமிருந்து மீட்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான வாகனங்களின் அணிவகுப்பை பார்த்த மக்கள் நெடுமூச்சு விடுகின்றனர்.

படைத்துறைகளின் மூத்த அதிகாரிகள் சிலர் முக்கிய கதிரைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். முன்னாள் வான்படைத் தளபதி சம்பத் துஷ்யகொத்தா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் ரவி செனிவிரத்தின பொலிஸ்துறை சார்ந்த பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், முன்னாள் கடற்படைத் தளபதி சிறீமேவன் ரணசிங்க துறைமுக அதிகாரசபைத் தலைவராகவும் பதவியேற்றுள்ளனர். பொதுத்தேர்தலுக்குப் பின்னர் இன்னும் எத்தனை படைத்துறை அதிகாரிகளுக்காக கதிரைகள் காத்திருக்கின்றனவோ?

தோழர் ஜனாதிபதியை நேரில் வந்து சந்தித்தார் இந்திய வெளியுறத்துறை அமைச்சர் ஜெய்சங்கர். 13 வருடங்களுக்கு மேலாகப் பேசப்படும் பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியே இம்முறையும் பேசினாராம். 1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது ஜே.வி.பி.யினர் சன்னதம் கொண்டு ஆடிய ஆட்டம் ஜெய்சங்கருக்கு நினைவிருக்க வேண்டும். வடக்கு-கிழக்கு இணைப்பையே பிரித்த ஜே.வி.பி.யினர் புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறைமையை இல்லாமற் செய்யப்போவ தாக பேசப்படுகையில் 13ம் திருத்தம் எங்கே இருக்கப் போகிறது?

நித்தம் நித்தம் கொழும்பிலுள்ள ராஜதந்திரிகள் தோழர் ஜனாதிபதியை சந்தித்து வருகின்றனர். ஏழு ராஜதந்திரிகள் ஒரே நாளில் தனித்தனியாகச் சந்தித்து சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. அநுரவின் வெற்றியை பூமி அதிர்ச்சிக்கு நிகரானது என்று விதந்துள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவர்(?) எரிக் சொல்கெய்ம், உலக நாடுகள் தோழர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்று வேண்டியுள்ளார்.

இவ்வாறான விசித்திர நீரோட்டத்துக்குள் பொதுத்தேர்தலில் நீந்தி எழும்ப இன்னமும் ஐந்து வாரங்களே உள்ளன. கடந்த மாத ஜனாதிபதித் தேர்தலில் மொத்தம் 160 தொகுதிகளில் 106ல் வெற்றி பெற்ற அநுர குமார அணிக்கு பொதுத்தேர்தலில் அறுதிப் பெரும்

> தெற்கில் 'தோழர்' ஜனாதிபதியின் தேசிய மக்கள் சக்தி பொதுத்தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைத் தாண்டி மூன்றிலிரண்டு பெறுமென எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில், தமிழ்த் தேசியம் என்று கூறிக்கொண்டு கதிரைக்குப் போட்டியிடுபவர்கள் தங்களுக்குள் பிளவுபட்டு நிற்பார்களாயின், இருபத்தியிரண்டிலிருந்து பத்துக்கு இறங்கிய எண்ணிக்கை மேலும் குறையும் அபாயம் உண்டு.

பான்மை (113) நிச்சயம் என்று தோழர் கூட்டம் சொல்கிறது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நோக்கி (151) தாங்கள் நடைபயில்வதாகவும், இதற்கு ஏதுவாக இளையோர் மற்றும் பெண்களுக்கு அபேட்சகர் தெரிவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகவும் சொல்கிறார்கள்.

இந்த எழுச்சிக்கு முகம் கொடுக்க முடியுமா என்ற அச்சத்தில் ரணில் விக்கிரமசிங்க, றுவான் விஜேவர்த்தன, பந்துல குணவர்த்தன உட்பட பலர் தேர்தலில் பங்குபற்றுவதைத் தவிர்க்கின்றனர். தமிழர் தரப்பிலும் சி.வி.விக்னேஸ்வரன், சீ.வீ.கே. சிவஞானம், மாவை சேனாதிராஜா, விநோநோகராதலிங்கம் உட்பட வேறும் சிலர் அரசியலில் ஓய்வெடுக்கப் போவதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒதுக்கப்படுவதற்கு முன்னர் ஒதுங்கி விடுவது கௌரவம் என நினைப்பவர்கள் தாமாக விலகிச் சென்று இளையோருக்கு வழி விடுவது காலத்தின் தேவை.

தமிழர் தாயகத்தில் யாழ்ப்பாண மாவட்டமும், கிழக்கில் திருமலை, அம்பாறை மாவட்டங்களும் சோதனைக் களத்தில் நிற்கின்றன. திருமலையில் கடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட நால்வரில் மூன்றாவது இடத்தில் அன்றைய தமிழரசுத் தலைவர் இரா.சம்பந்தன் வெற்றி பெற்றார். சிறு எண்ணிக்கையால் அருந்தப்பில் இவர் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் எவரும் வெற்றி பெறாததால் தேசியப் பட்டியலூடாக கலையரசன் நியமனமானார். அடுத்த மாத பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியம் என்ற குடைக்குள் சுவாசம் செய்யும் அனைத்துத் தமிழ் கட்சிகளும் இணைந்து ஒரு பெது வேட்பாளரை நியமித்தால் மட்டுமே ஒருவாறு இவ்விரு தொகுதிகளிலும் இருப்பைக் காப்பாற்ற முடியும். அந்த ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும். சின்னத்துக்கான போட்டியால் ஆசனத்தை இழக்கக் கூடாது.

யாழ்ப்பாண மாவட்டம் சுருக்குக் கயிற்றில் தொங்குவதுபோல் காட்சி தருகிறது. மக்கள் தொகை குறைந்து போனதால் ஏழு பிரதிநிதிகள் எண்ணிக்கை ஆறாகக் குறைந்துள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் இங்கு தமிழரசுக்கு இரண்டும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு ஒன்றும், தமிழ் காங்கிரசுக்கு ஒன்றும், புளொட்டுக்கு ஒன்றும், ஈ.பி.டி.பி.க்கு ஒன்றும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒன்றுமாக ஏழு ஆசனங்கள் கிடைத்தன. இவற்றுள் ஐந்து மட்டுமே தமிழ்த் தேசிய கொள்கைக்கு உட்பட்டவை.

அடுத்த மாத தேர்தலில் தமிழரசுக் கட்சிக்குள் பயங்கரமான கழுத்தறுப்பு இடம்பெறுகிறது. வயோதிபத் தலைமையால் எதுவும் செய்ய முடியாத நிலையில், சகல அதிகாரங்களையும் தனது பொக்கற்றுக்குள் எடுத்துக் கொண்ட சுமந்திரன் அந்த வீட்டை சிதைக்கும் அரும்பணியில் ஈடுபட்டிருக்கிறார். இளையோருக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் என்ற பெயரில் தம்முடன் முட்டி மோதுபவர்களை அப்புறப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகிறார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து கழன்ற ஐந்து கட்சியினரும் ஜனநாயக கூட்டமைப்பு என்ற பெயரில் சங்கு சின்னத்துடன் களம் இறங்குகின்றனர்.

அநுர குமாரவின் அணி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு தொகுதியை கைப்பற்றும் சாத்தியம் உண்டென தமிழ்த் தேசிய கட்சியினரே நம்புகின்றனர். குமார் பொன்னம்பலத்தின் அண்மைய அபாய எச்சரிக்கை இது சம்பந்தமானது. அநுர குமாரவின் தோழர்கள் தமிழர் தாயகத்தின் மற்றைய மாவட்டங்களிலும் மூன்று ஆசனங்களைப் பெறக்கூடுமென எதிர்வு கூறப்படுகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், புதிய நாடாளுமன்றத்தில் தோழர் அநுரவின் ஆட்சிக்குத் தேவையான சகல ஆதரவுகளையும் வழங்க அவர் கேட்காமலேயே சஜித் பிரேமதாச அணி முன் வாக்குறுதி அளித்துள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க தங்களின் பொதுஜன பெரமுன ஆதரவு வழங்குமென நாமல் ராஜபக்ச அட்வான்ஸ் உத்தரவாதம் வழங்கியுள்ளார். இந்தத் தேர்தலிலும் ரணில் தரப்பு மூன்றாம் இடம்தான் என்ற கணிப்பில் அதனை யாரும் கணக்கெடுப்பதாகத் தெரியவில்லை.

தோழர் ஜனாதிபதி அணிக்கு கிடைத்துவரும் பாரிய ஆதரவு பற்றி நீண்டகால அரசியல் அனுபவ ஊடகர் ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்:

"2004ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் ஆதரவால் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரிய வெற்றியைப் பெற்றது. அதேபோன்று அடுத்த மாத பொதுத் தேர்தலில் அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களைப் பெறும். இதற்கான அடிப்படைக் காரணம் ஜே.வி.பி. மீதான "பய-பக்தி" என்று சுருக்கமாகக் கூறினார் அந்த ஊடகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனதிபதி தேர்தல் முடிவுகள்: ஈழத்தமிழருக்கு ஓர் எச்சரிக்கை!

ச. வி. கிருபாகரன்
பிரான்ஸ்



கடந்த ஜனதிபதி தேர்தலில் அனுரா குமாரா திசநாயக்கா - வெற்றிபெற்று இன்று சிறிலங்காவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக கடமையாற்றுகிறார். இவரது வாழ்க்கை வரலாற்றை படிக்கும் பொழுது, இப்படியான சுழலில் வளர்ந்து வாழ்ந்த ஒருவர், இன்று சிறிலங்காவின் ஜனதிபதியாக திகழ்கிறார் என்பதை, மோச்சத்திலோ நரகத்தில் வாழும், இலங்கைதீவின் முன்னாள் அரசியல்வாதிகளில், ஒருவர் தவிர்ந்த வேறு எந்த அரசியல்வாதியும் எள்ளவும் நம்ப மாட்டார்கள். அவர்களது காலத்தில், இப்படியான பின்னனியை கொண்ட ஒருவர், சிறிலங்காவின் ஜனதிபதியாக வருவதற்கான சாத்வீகம் அறவே காணப்படவில்லை.

படுகொலை செய்யப்பட்ட தோழர் றோகண விஜயவீரா, "நான் இல்லையென்றாலும், இந்த தேசத்தில் மக்கள் அரசியல் என்றாலே கசப்பாக இருக்கும் ஒரு தருணத்தில், எனது ஜேவிபி சகோதரர் ஒருவர் ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்றுவார். அவர் பிறப்பில் செல்வந்தராகவோ, பணக்காரராகவோ இருக்க மாட்டாரென" கூறியுள்ளதாக, இன்று சமூக வலையங்களில் காணுகிறோம்.

ஆனால் ஜே.வி.பியை ஆரம்பித்து தோல்விகளுக்கு மேல் தோல்வியை சந்தித்தது மட்டுமல்லாது, தன்னையும் தனது குடும்பத்தின் எதிர்காலத்தையும் தொலைத்து, தனது கட்சிக்கு இறுக்கமான ஓர் அத்திவாரத்தை போட்டு சென்ற தோழர் றோகண விஜயவீராவின் திறமைகளை, யாரும் குறைத்து கணிக்க முடியாது.

எது எப்படியானலும், அவருக்கு இறுதி நேரத்தில் நடந்த அநியாயங்களிற்கு, காரணகர்த்தாவான சிலர் இன்று உயிருடன் இல்லையானலும், பலர் இன்றும் உயிருடன் உள்ளார்கள் என்பதை ஜனதிபதி அனுரவிற்கு நான் எழுதி தான் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

தோழர் றோகண விஜயவீராவின் படுகொலையை, மனித உரிமையாளர் என்ற அடிப்படையில், அவருக்கு நடந்த ஈவிரக்கம் அற்ற மனிதாபிமானம் அறவே அற்ற கொலைக்கு, அவரது நண்பர்கள் தோழர்கள், ஐ.நா. மனித உரிமை வழிகள் மூலம், நீதி காண முயற்சிக்க வேண்டுமென, பல காலமாக எனது ஆங்கிலம் தமிழ் கட்டுரைகளில் எழுதி வந்துள்ளேன். இப்பொழுது அவர்கள் கையில் யாவும் உள்ள கட்டத்தில், அவர்களால் றோகண விஜயவீராவின் படுகொலைக்கு நீதி காண முடியும்.

நிற்க, காய்வாளர்கள் அல்லாது உண்மையான ஆய்வாளராக ஒருவர் இருந்தால், உண்மைகள் யாதார்த்தங்களை அலட்சியம் பண்ணி, ஆய்வு செய்வது என்பது, 'முழு பூசனிக்காயை சோற்றுக்குள் புதைப்பதற்கு' சமன். அல்லது இறந்த யானையை ஓர் கைலேஞ்சியால் மூடுவதற்கு சமன்.

**உலகிற்கு அறை கூவியுள்ளோம்**

நாம் தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளருக்கு அன்றும் இன்றும் என்றும் ஆதரவாக இருப்பது மட்டுமல்லாது, நடைபெற்று கொண்டிருக்கும் ஐ.நா.மனித உரிமை சபையில், கடந்த மாதம் 20ம் திகதி, தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளரை ஆதரித்து, தமிழர் மனிதர் உரிமை மையத்தின் - நீண்ட கால 'சர்வதேச இயக்குனர்', திருமதி டியேற்றி மக்கோணால் உரை ஆற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது, பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞபானத்தை, ஆங்கிலத்தில் கட்டுரையாக எழுதி, தமிழர் அல்லாத ஏனைய சமூகத்தினருக்கு, எதற்காக தமிழ் பொது வேட்பாளர் முன்னிறுத்தப்பட்டார் என்பதையும், உலகிற்கு கூறியுள்ளோம்.

சஜித் பிரேமதாச ஆதரவாளர்களான - ரவூப் ஹக்கீம், ரிசாட் பதியுதின், சுமந்திரன், கிழக்கு தமிழர்களை பகடைகாய்களாக பவிக்கும் சைக்கில் கட்சி, ஆய்வாளர்கள் அல்ல சில காய்வாளர்கள் ஆகியோரது கிண்டலுக்கும், வியாக்கியானத்திற்கு இடம் கொடுக்காது, தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளர், 226,343 வாக்குகளை பெற்று இலங்கைதீவில் ஐந்தாவது இடத்தை பெற்றுள்ளது, ஈழத் தமிழர்கள் யாவருக்கும் பெருமை தரும் விடயமாகும்.

ஆனால், நாம் வேறு விதமாக தேர்தல் முடிவுகளை பார்க்கும் பொழுது, வடக்கு கிழக்கு வாழ் மக்கள் இன்றும், சிங்கள பௌத்த வேட்பாளருக்கு ஆலவட்டம் பிடிப்பதையும், சிறிலங்காவின் புதிய ஜனதிபதி, பாரளுமன்றத்தில், வடக்கு கிழக்கை தாயகமாக கொண்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளிற்கு, தீர்வு கொடுப்பார் போல், எண்ணுவதாக, எண்ண தோன்றுகிறது. ஈழத்தமிழர் பற்றிய விடயம், அவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இல்லை, அவர்கள் செயல்பாடுகளிலும் இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதற்காக சஜித் பிரேமதாசவிற்கு வடக்கு கிழக்கில் கிடைத்த வாக்குகள் யாவும் - மஞ்சல் ரை காரருக்காகவோ அல்லது திரு எக்கிய ராஜ்ஜிய காரருக்காகவோ கிடைத்த வாக்குகளாக அவர்கள் கற்பனை செய்வார்களானால், அதற்கு மக்கள் நவம்பர் 14ம் திகதி நடைபெறவிருக்கும் பாரளுமன்றத் தேர்தலில் பதில் கூறுவார்கள்.

இங்கு யாவரும் கவனிக்க வேண்டிய உண்மை என்னவெனில், ஜனதிபதி தேர்தலில் முப்பத்தி ஒன்பது வேட்பாளர்களில், தோழர் சிறிதுங்கா ஜெயசுரிய தவிர்ந்த மற்றை சிங்கள பௌத்த வேட்பாளர் யாரும், வடக்கு கிழக்கு வாழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் பற்றி ஒரு வார்த்தை கூட கூறியது கிடையாது.

**தமிழ் வேட்பாளரின் முக்கியத்துவம்**

இதை வேறுவிதமாக கூறுவதனால், தமிழ் மக்களின் அரசியல் உரிமை பற்றி, சிங்கள பௌத்தர்களிற்கு எடுத்துரைக்கும் எந்த வேட்பாளரும், தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை, கடந்த ஏழு தசாப்தங்களிற்கு மேலாக நடந்த தேர்தல்கள், நன்றாக ஈழத் தமிழர்களிற்கு உணர்த்தியுள்ளது. இவை தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளரின் முக்கியத்தை உணர்த்திய பொழுதிலும், வடக்கு கிழக்கு வாழ் மக்கள், பொது தமிழ் ஜனாதிபதி வேட்பாளருக்கு அளித்த வாக்குகள், ஈழத்தமிழரை திருப்தி படுத்துவதாக இல்லை.

ஏதோ 'கல்லில் நார் உரித்த கதையாக', பொது வேட்பாளர், வடக்கு கிழக்கு வாழ் மக்களின் மானத்தை காப்பாற்றியது மட்டுமல்லாது, ஈழத்தமிழர் நிலைபாட்டை உலகிற்கு காட்டியுள்ளது வரவேற்க கூடிய விடயம்.

இதற்குள் அரசியல் முதிர்ச்சியற்ற பகிஸ்கரிப்பு காட்சியான சைக்கிள் கட்சியின் நிலைபாடு, ஆங்கில கமிடியன் திரு பீன் போல் காணப்பட்டதை பலர் பார்த்து நன்றாக வாய்விட்டு சிரித்தார்கள். இவர்களின் தலைவரான திரு பீன் கூறியதாவது, "பொதுவேட்பாளாருக்கு கிடைத்த வாக்குகள் யாவும், தமிழ் தேசியத்திற்கு கிடைத்த வாக்குகளாம்". அருமையான கண்டுபிடிப்பு! இது உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற வேண்டிய விடயம். பொதுவாக பிழை பிடிக்கும் சுபாவம் கொண்ட திரு பீன், விடயம் புரியாது வாயை திறந்து, சிரிப்பிற்கு ஆளாகியுள்ளார்.

அப்படியானால், இவர்கள் தமிழ் தேசியத்திற்கு கிடைக்க இருந்த வாக்குகளை, பகிஸ்கரிப்பு செய்த தமிழ் துரோகிகள் என்பதை ஒத்து கொள்வார்களா?

> **"பொது தமிழ் ஜனாதிபதி வேட்பாளருக்கு எதிராக வெளிப்படையாக, பொதுவெளியில் கருத்துக்களை முன் வைத்தவர்களை, வடக்கு கிழக்கு வாழ் மக்கள், எதிர்வரும் பாரளுமன்றதேர்தலில், ஒதுக்க தவறினால், அது ஈழத்தமிழர்களின் வரலாற்று தவறாகும்."**

இவர்களிற்கு நவம்பர் 14ம் திகதி, மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள்.

**கொழும்பு வாழ் தமிழன்**

ஜனதிபதி தேர்தலை பகிஸ்கரித்த இவர்கள், இனி வரும் காலத்தில், ஏன் பாரளுமன்ற தேர்தலில் பங்கு கொள்கிறார்கள்? மக்களிடையே உள்ள கேள்வி என்னவெனில - தற்போதைய போக்கில், சிறிலங்கா பாரளுமன்றத்தில், ஒற்றையாட்சிக்கு வெளியில், அரசியல் விளங்காதவர்களிற்கு திரு பீன் கூறும் அரசியல் தீர்வு கிடைக்கப் போகிறதா?

எனது கட்டுரைகளில் தொடர்ந்த கூறிவரும் விடயங்களில் ஒன்று, கொழும்பு வாழ் தமிழன், தனது சுயநலம், சொத்து பத்து, சொந்தம் பந்தம், அயலவர் நண்பர்களிற்காக, ஈழத்தமிழ் மக்களின் அரசியலில், மண் தூவி வருவது, மிக நீண்ணட காலமாக வழக்கமாகியுள்ளது. இன்று தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக சிங்கள பௌத்தர்கள் பிரச்சரத்தையும் மேற்கொண்டதற்கு மேலாக, கொழும்பு தமிழர்களான - திரு பீன், மஞ்சள் ரை, எக்கி ராஜ்ஜீயம் போன்றவர்கள், தெற்கில் தமது பெயருக்கும் புகழிற்குமாக, பொது வேட்பாளருக்கு மண் துவினர்கள் என்பதை, எந்த ஈழத் தமிழனும் மன்னிக்க மாட்டான்.

நாம் கடந்த ஜனதிபதி தேர்தலில் முடிவுகளை மிகவும் உன்னிப்பாக கவனிக்கும் பொழுது, வடக்கில் சிங்கள குடியேற்றங்கள் செயல்படுவதையும், கிழக்கு முற்றாக சிங்கள குடியேற்றங்களினால் பறி போயுள்ளதையும், அப்படியே படம் பிடித்து காட்டியுள்ளது.

தற்போதைய நிலையில், எந்த தெற்கின் அரசியல்வாதிகளும் - வடக்கு கிழக்கு என கதைப்பதை நிறுத்தி, வடக்கு பற்றியே உரையாற்றுவதையும், வடக்கு கிழக்கு வாழ் மக்களை, 'சிறுபான்மை' மக்கள் என்று கூறுவதையும் காண கூடியதாகவுள்ளது. இதே போல், கொழும்பு வாழ் தமிழ் அரசியல்வாதிகளும் வடக்கு பற்றியும் 'சிறுபான்மை' பற்றியும் உரையாடுவதை காணக்கூடியதாகவுள்ளது. இந்த போக்கு தொடருவது, ஈழத்தமிழர்களது அரசியல் அபிலாசைகளிற்காக, தமது சொத்து பத்து, பொருளாதாரம், கலை கலாச்சரத்தை பறிகொடுத்ததுடன், தமது உயிரை நீர்த்த மக்களிற்கும் போராளிகளிற்கும் நாம் செய்யும் தூரோகமாகும்.

புதிய ஜனதிபதியின் அதிரடி வேலைகள் காய் நகர்த்தல்கள், வடக்கு கிழக்கு வாழ் இளைஞர்களிடையே ஓர் எழுச்சி காணப்படுவதாக சிலர் கூறுகிறார்கள். தற்போதைய அரசு, அதாவது புதிய ஜனதிபதியான அனுர, மற்றும் அவரது பிரதமர், அமைச்சார்கள் என்ன செய்கிறார்கள் என்பதை சுருக்கமாக கூறுவதனால் - இன்று இரண்டு ஒரு வாரங்களாகியும், இவர்கள் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் அரசில் அபிலாசைகளிற்கோ, கலை கலாச்சாரத்திற்கோ ஏதுவும் செய்ய முயற்சிப்பதாக தெரியவில்லை. அது மட்டுமல்லாது, இவர்களது நியமனங்களில், தமிழ் முஸ்லீம் ஓரம் கட்டப்படுவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

ஆகையால், "வளரும் பிள்ளையை முளையில் தெரியும்", என்பது போல், இவர்களது இந்த போக்கு, முன்னைய ஆட்சியாளருக்கும், இவர்களுக்கும் இடையில், ஈழத்தமிழர் எந்த வேறு பாட்டை காண போவதில்லை.

ஆனால் திரு எக்கிய ராஜ்ஜியமும் அவருடன் சம்பந்தப்பட்டவர்களையும், அவர்களது இமலாய பிரகடனத்தையும், ஜனதிபதி தூசு தட்டி பார்ப்பதாக அறிகிறோம். இது நன்மையான காரியமில்லை. அப்படியானல், முன்னைய குமாரசுரியர், கதிர்காமர் வரிசையில், இந்த இமலாய பிரகடன போலி பெயர் வழிகளும், பயணிக்க போகிறார்களா?


ஆய்வு செய்வதற்கு நிறைய இருந்தாலும், சுருக்கமாக கூறுவதனால் - பொது தமிழ் ஜனதிபதி வேட்பாளருக்கு எதிராக வெளிபடையாக, பொதுவழியில் கருத்துக்களை முன் வைத்தவர்களை, வடக்கு கிழக்கு வாழ் மக்கள், எதிர்வரும் பாரளுமன்றதேர்தலில், ஒதுக்க தவறினால், அது ஈழத்தமிழர்களின் வரலாற்று தவறாகும்.


ஏதிர்வரும் பாரளுமன்ற தேர்தலும், புதிய ஜனதிபதியும், ஏழ்மை, வறுமை, வர்க்க போராட்டங்களையே மனதில் கொண்டு திட்டங்களை முன் வைக்கிறார்களே தவிர, இன ஒற்றுமை பிராந்திய ஒருமைபாடுகளில் அவர்கள் அக்கறை காட்டும் எந்த சைகைகளும் இது வரையில் காணப்படவில்லை. தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் அறவே அலட்சியம் செய்யப்படுகிறது.

இதை வடக்கு கிழக்கு வாழ் மக்கள் மனதில் நிறுத்தி, எதிர்வரும் பாரளுமன்ற தேர்தலில் தமிழ் பிரதிநிதிகளிற்கு எப்டியாக வாக்கை அளிக்க வேண்டும் என்பதை இப்பொழுதே திட்டமிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கின் மாற்றத்துக்குள் கரைந்து போகுமா தமிழர் தேசம்?





கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் நடைபெற்ற முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் மூலம் தெற்கு மக்கள் மாற்றத்துக்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயகவிடம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கையளித்துள்ளனர். அனுரவும் எளிமையான முறையில் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றதுடன் முன்னைய ஆட்சியாளரின் முறைகேடுகள் சிலவற்றை ஜனரஞ்சகமான முறையில் வெளிப்படுத்தியதுடன் முற்போக்கான சில நியமனங்களையும் மேற்கொண்டுள்ளார். அதேபோல தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் சிலவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட முயற்சிகளிலும் இறங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் சில தளர்வுகளை மக்கள் நலன்சார்ந்து மேற்கொள்ளல், தேவாலயக் குண்டு வெடிப்பு, மத்திய வங்கி பிணைமுறி மோசடி உட்பட சில ஊழல் முறைகேடுகள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள், உரமானிய அதிகரிப்பு மற்றும் வரிக்குறைப்பு முயற்சிகள் என சில முன்னெடுப்புகள் தொடர்வதைக் குறிப்பிடலாம். இதற்கு வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலும் ஒரு காரணமாக இருக்கலாம். எவ்வாறாயினும் அனுரவின் உண்மையான மாற்றங்களை தேர்தலின் மூலம் நாடாளுமன்ற அதிகாரத்தையும் கைப்பற்றிய பின்னரே காணக்கூடியதாக இருக்கும்.

அனுரவினால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த மாற்றங்களை விரும்பும் இலங்கையர் என்ற வகையில் தமிழர்களாகிய நாமும் நிச்சயமாக வரவேற்க வேண்டும், அதற்கான ஆதரவையும் வழங்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துகள் இருக்கமுடியாது. எனினும் தமிழர் தேசம் என்ற எல்லையைக் கடந்து சென்று இந்த வரவேற்பையும் ஆதரவையும் வழங்குவதற்கான காலம் இன்னும் கனிந்துவிடவில்லை என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்கவேண்டும். நாம் இலங்கையராக இருந்தாலும் இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்படுவதற்கான அரசியல் மாற்றங்கள் எதுவும் இன்னும் இங்கு நிகழ்ந்துவிடவில்லை. தெற்குக்கு ஆதரவளிப்பது என்பது வேறு. தெற்குடன் கரைந்துவிடுவது என்பது வேறு. பள்ளிப் பருவத்தில் நீங்கள் வேதியியலில் (Chemistry) கலவை, சேர்வை என்ற இரண்டுக்குமிடையிலான வேறுபாடு பற்றிப் படித்திருப்பீர்கள். கலவையில் தனிமங்கள் சில தமக்கிடையிலான இணைப்புப் பண்புகளுடன் சேர்ந்து புதிய பொருளாக மாறினாலும் அங்கு அவை ஒவ்வொன்றினதும் தனித்தன்மை பாதுகாக்கப்பட்டிருக்கும். ஆனால் சேர்வையில் இணையும் தனிமங்கள் தனித்தன்மை இழந்து புதிய பொருளாக வடிவெடுத்திருக்கும். நாங்கள் அடிக்கடி உண்ணும் மிக்ஷரையும் தோசையையும் எண்ணிப் பாருங்கள். உயர்ந்த மட்ட ஜனாநாயகத்தைப் பேணிவருகின்ற நாடுகளில் உள்ள ஒவ்வொரு தேசிய இனமும் மிக்ஷரில் இணைந்திருப்பதுபோல தமது தனித்துவத்தை இழக்காதிருக்கும் அதேவேளை நாடு என்ற சுவைமிகு பொருளாக ஒன்றிணைந்திருப்பதைக் காணலாம். மாறாகச் சேர்வையாக மாறிய பல சிறுபான்மைத் தேசிய இனங்கள் பெரும்பான்மையுள் கரைந்து உலகப்பந்தில் காணாமலாக்கப்பட்டன என்பதுதான் வரலாறு. இதுபோன்று பெரும்பான்மைப் பௌத்த சிங்கள தேசியத்துள் சேர்வையாக மாறும் ஒரு நிலைக்கு ஈழத்தமிழ் மக்களைத் தள்ளப் போகிறோமா? அல்லது தடுக்கப் போகிறோமா? இவை இன்று ஈழத்தமிழர்களைப் பொறுத்து முக்கியமான கேள்விகளாகும்.

இவ்வாறான கேள்விகள் இன்று ஏன் முக்கியம் பெறுகின்றன? ஒருபுறத்தில் தெற்கின் மாற்றத்தையும் தமது இனத்தின் எதிர்கால இருப்பையும் சரிவரப் புரியாத சிலர் தம்மையறியாமலேயே அனுரவின் தேசிய மக்கள் சக்தியுடன் தமிழ் மக்களை ஒன்றறக் கலக்கும் கைங்கரியத்தில் இறங்கியிருப்பது. இச்சிலருள் எமது வரலாற்றைச் சரிவரப் புரிந்துகொள்ளாத பட்டறிவு குறைந்த சில இளைஞர்கள் மட்டுமல்ல நன்கு புரிந்துகொண்ட படித்த, உயர்பதவிகள் வகிப்பவர்களும் அடக்கம் என்பதுதான் கவலைக்குரிய விடயம். மறுபுறத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு இன்னும் மதிப்பளிக்காது எமது அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் பழைய பல்லவியை பாடநினைப்பது. கட்சிநலன், பதவி, சலுகை, அதிகாரம் போன்றவற்றுக்காக இதுவரை தமிழர்களை ஈடுவைத்து சுகம் கண்ட இத்தலைவர்கள் இறுதியாக தமிழர்களை விற்கும் கைங்கரியத்துக்கு வழிகோலி வருவதாகவே செய்திகள் கசிகின்றன. இதற்குப் பௌத்த சிங்களப் பெருந்தேசியத்துள் தமிழர்களைச் சேர்வையாக்குவதில், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்காக களமிறங்கத் துடிப்பவர்கள் இழுவைக்காரணிகளாக செயற்படும் அதேவேளை அதனை வேகப்படுத்தும் தள்ளுகாரணிகளாகத் தமிழ்த்தேசியவாதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் இன்றைய அரசியல் தலைவர்களின் முன்னெடுப்புகள் அமைகின்றன. ஈழத் தமிழ்மக்களின் இருப்புக்கு இந்த இருவிசைகளையும் உடனடியாக உறங்கு நிலைக்கு கொண்டு வருவது காலத்தின் கட்டாயம். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென சிந்திக்கவேண்டியது ஒவ்வொருவரது இன்றைய தலையாய கடமையுமாகும்.

இன்றைய அரசியல் களநிலைமைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திச் சிங்களத் தேசியக் கட்சிகளுக்கு தரகுவேலை பார்க்க நினைக்கும் தலைவர்கள், குறிப்பாகத் தேசிய மக்கள் சக்தி ஊடக முளைத்தெழ நினைக்கும் புதிய அரசியல் தலைவர்களும் இனத்தை ஒட்டுமொத்தமாகக் கையறு நிலைக்குக் கொண்டு வந்துவிட்ட பழைய அரசியல் தலைவர்களும் முதலில் மக்களின் உணர்வுகளையும் கருத்துக்களையும் ஆழமாக அறிய முயற்சியுங்கள். அவற்றை நீங்கள் சரிவர அறிந்தீர்களானால் அம்மக்களில் பெரும்பான்மையினர் உங்கள் யாருடனும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்து கொள்வீர்கள். அதனைச் சரிவரப் புரிந்தீர்களானால் உங்களின் தற்போதைய பாதை தவறானது உங்கள் மக்களுக்கானதல்ல என்பதை உணர்வீர்கள். தமிழ் மக்களுக்கான சரியான பாதையைத் தெரிந்தெடுக் அது உதவும்.

தேசிய மக்கள் சக்தியூடாக அரசி யல் தலைவராக வருவதற்கு எண்ணும் இளைஞர்களே நீங்கள் செய்யவிருப்பது ஒன்றும் புதுமையான அரசியலல்ல. அதுவும் தரகு அரசியல் என்பதை மனங்கொள்ளுங்கள். ஏலவே இவ்வாறான தரகுவேலை பார்த்துவரும் டக்ளஸ், அங்கஜன், விஜயகலா, உமாசந்திரா, வியாழேந்திரன், பிள்ளையான்

இன்றைய அரசியல் களநிலைமைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திச் சிங்களத் தேசியக் கட்சிகளுக்கு தரகுவேலை பார்க்க நினைக்கும் தலைவர்கள், குறிப்பாகத் தேசிய மக்கள் சக்தி ஊடக முளைத்தெழ நினைக்கும் புதிய அரசியல் தலைவர்களும் இனத்தை ஒட்டுமொத்தமாகக் கையறு நிலைக்குக் கொண்டுவந்துவிட்ட பழைய அரசியல் தலைவர்களும் முதலில் மக்களின் உணர்வுகளையும் கருத்துக்களையும் ஆழமாக அறிய முயற்சியுங்கள்.

போன்றவர்களுக்கும் உங்களுக்கும் ஒரேயொரு வித்தியாசம் மட்டுமே இருக்கும். அவர்கள் பழைய தரகர்கள். நீங்கள் புதிய தரகர்கள் என்பதுவே அது. தெற்கு அரசியலில் ஏற்பட்ட மாற்றம் எத்தகையது என்பது எதிர்காலமே தீர்மானிக்கும். அதிலும் தமிழ்மக்களுக்கான அவர்களது உண்மையான மாற்றம் என்ன என்பது எங்களுக்கு மட்டுமல்ல அவர்களுக்கும் தெரியாது. அவ்வாறு ஒரு நியாயமான மாற்றம் ஏற்படுவது என்றாலும் அதிககாலம் தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் காலப் பரப்புரைகளை வைத்தோ அல்லது அனுர ஜனாதிபதியானதன் பின்னர் மேற்கொண்ட சில நடவடிக்கைகளை வைத்தோ அவர் மீதும் அவர்கட்சிமீதும் முழுநம்பிக்கை கொள்வதைவிட முட்டாள்தனம் வேறொன்றுமிருக்க முடியாது. தேசிய மக்கள் சக்தி என்பது ஜே.வி.பியின் இன்னொரு முகம் மட்டுமே. அந்தமுகம் மறைந்து இந்த முகம் உருவாகவில்லை. இன்றும் தேசிய மக்கள் சக்தியின் அடித்தளம் ஜே.வி.பி.யே. அதன் இயல்பான பண்புகளும் அதற்கேற்ற கட்சியாப்பும், அதனை முழுமையாக உள்வாங்கியுள்ள அதன் தலைமையும் அவ்வாறே உள்ளன. பழைய முகம் எப்படியானது என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவர். இவற்றுள் எந்த முகம் நிரந்தரம் என்பதை காலந் தீர்மானிக்குமுன் முந்திரிக் கொட்டைகளாக கருத்துகளை முன்வைப்பதையும் காரியத்தில் இறங்குவதையும் அக்கட்சியில் ஈர்ப்புக்கொண்டோர் தவிர்ப்பது நல்லது. தெற்கில் ஏற்பட்ட இந்த மாற்றத்தின் மீதான காதலாலும் சுயநல அரசியல் செய்துவரும் தமிழ் அரசியல் தலைவர்கள் மீதான வெறுப்பினாலும் உருவான அரசியல் களத்தை தமக்குச் சாதகமாக மாற்றுவதற்கு முயலும் தேசிய மக்கள் சக்தித் தலைவர்களின் அழைப்பை முன்னெச்சரிக்கையுடனேயே அணுகவேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் மூத்த தலைவர்களுடனான இக்கட்டுரையாளனின் உரையாடலின்மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்த ஒரு விடயம் தமிழ்த் தேசியப் பிரச்சினை என்ற ஒன்று தேசம் இனம் சாரந்ததில்லை, அது சமூகப் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே, சமூகப் பொருளாதாரப் பிரச்சினை தீரும்போது அப்பிரச்சினையும் மறைந்துவிடும் என்பதாகும். இவ்வாறான புரிதலில் உள்ள அக்கட்சியினர் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை எவ்வளவு தூரம் நிறைவேற்றுவர்? அவ்வாறு அனுர நிறைவேற்ற விரும்பினாலும் அவர்களாக ஏற்படுத்தி வைத்திருக்கும் அரசியலமைப்பு உட்பட பௌத்த சிங்கள கட்டமைப்புகள் அதற்கு இடந்தருமா? அரசியலமைப்பு மாற்றம் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்படும் என்று கூறுவது சாத்தியமானதா? இவ்வாறான நியாயமான கேள்விகளுக்கு விடைகாணாமல் தேசிய மக்கள் சக்திக்கு கொடிபிடிப்பதன் நோக்கமென்ன? இதன்மூலம் அவர்கள் கருதுவது போல தமிழ்த் தேசியப் பிரச்சினை என்று ஒன்றுமில்லை. அது வெறும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைதான் என்பதை நாங்களாகவே நிறுவுவது போலாகாதா? சிந்தித்து செயற்படுங்கள்.

தமிழ்த் தேசியத்தின் பேரால் இன்னும் அரசியல் பிழைப்புக்காக அவாப்படுகின்ற அரசியல் தலைவர்களே! நீங்கள் எப்போது உங்கள் மக்களுக்கு உண்மையாக இருக்கப் போகிறீர்கள்? உங்கள் சுயநல அரசியலால் வெறுப்புற்ற இளைஞர்கள் தமிழினத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் அரசியல் பாதையில் செல்வதும் செல்ல எத்தனிப்பதும் இன்னும் உங்கள் கண்களுக்குப் புரியவில்லையா? இன்று அரசியல் அறிவைவிட உணர்வுகளுக்கு முக்கியமளித்து தவறான அரசியல் பாதையில் இளைஞர்கள் செல்ல விளைவதற்கு நீங்கள்தான் முக்கிய காரணம் என்பதை எப்போது புரிந்து கொள்ளப் போகிறீர்கள்? அல்லது புரிந்தும் புரியாதவர் போல தொடர்ந்து நடிக்கப் போகிறீர்களா? மக்களுக்காக இல்லாவிட்டாலும் மனச்சாட்சிக்காக (இருந்தால்) நல்லது செய்யலாமே. நீங்களாவது மக்களுக்கு நல்லதுகள் செய்யவில்லை. போகட்டும். நல்லது செய்யவிழையும் இளைஞர்களுக்கு வழிவிட்டு உங்கள் நல்ல பட்டறிவுகளின் மூலம் அவர்களுக்கு வழிகாட்டலாமே!

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி - ஆடல்கலாலயத்தின் 35 ஆவது ஆண்டு விழாவில் உலக சாதனை!

**திருமதி சாந்தினி துரையரங்கன்**




ஜேர்மனி - கிறீபீல் நகரத்திலுள்ள ஆடல் கலாலயத்தின் 35 வது ஆண்டு விழா அண்மையில் ஜெர்மனி டியூஸ்பேக் நகரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நேரடி பக்கவாத்தியக் கலைஞர்களின் பின்னணி இசையுடன், ஆசிரியர், ஆசிரியமாணவர்களின் நட்டுவாங்கத்துடன் 30 நடன நிகழ்வுகள் நடைபெற்றமை இந்நிகழ்வின் தனித்துவமான அம்சமாகும்.

ஆடற்கலைமணி திருமதி றெஜீனி சத்தியகுமார் அவர்கள் பதித்த விதை இப்போ கிளைகள் பரப்பி பெரு நிறுவனமாக வளர்ந்து வருகின்றமை கண்கூடு. புலம் பெயர் தேசத்தில் பிறந்து வளர்ந்த இளையவர்கள் முன்னின்று நடாத்திய ஒரு பெரு விழா. பற்பல துறைசார்ந்தவர்கள் அவையை அலங்கரித்திருந்தனர். ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அழகாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

நடனமணிகளின் பெற்றோர்கள் புடைசூழ நடன ஆசிரியர் திரு திருமதி சத்தியகுமார் தம்பதிகள், பிரதமவிருந்தினர் செல்வி சிம்ரன் சிவகுமார் (இந்தியா), சிறப்பு விருந்தினர் நடன ஆசிரியர் திருமதி சாந்தினி துரையரங்கன் (ஜெர்மனி) சகிதம் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கை மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு வை.சிவராசா சமூக ஆர்வலர் திரு எஸ் கந்தசாமி மற்றும் பிரமுகர்கள் ஏற்றி, இறை வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

புஷ்பாஞ்சலி, விநாயகர் ஸ்துதி, அலாரிப்புடன் தொடங்கிய நடன நிகழ்ச்சி நாட்டிய மார்க்கத்தின் அமைப்பில் தொடர்ந்து நடைபெற்றன. இடையே சிறுவர்களுடைய நடனங்களும் இடம் பெற்றன. சப்தம், கீர்த்தனைகள், திருப்புகழ், கௌத்துவம், வர்ணம், கோலாட்டம், தாயகப்பாடல், குறத்தி நடனம், நாச்சியார் திருமொழி, தில்லானா எனத் தொடர்ந்திருந்தன.


நடன ஆசிரியர்களான செல்வன் நிமலன், திருமதி தீபனா குரலில் லய கவிதை நிகழ்ச்சி ஸ்வரம், ஜதி கலந்து இராகமாளிகை தாளமாளிகையாக அமைந்திருந்தமை வித்தியாசமான ஒரு நிகழ்வாக இருந்தது. ஸ்வரக்குச்சா என்ற நிகழ்வில் ஆசிரிய மாணவர்களும் பிரதம நடன ஆசிரியர் றெஜினி சத்யகுமார் அவர்களும் இணைந்து அழகாக ஆடிய நிகழ்ச்சியை மிருதங்க கலைஞன் நட்டுவாங்கம் செய்தமையும் தனித்துவ அம்சமாகும். ஒரு இளம் மிருதங்கக் கலைஞன் நட்டுவாங்க கலைஞராக மேடையை அலங்கரித்தமை ஜெர்மனியில் நான் அறிந்த முதல் மேடை நிகழ்ச்சியாகும். கடல் பற்றி அமைந்த நிகழ்ச்சி, வர்ணம் போன்றன இந்நிகழ்வின் தனித்தன்மை எடுத்துக்காட்டின.

பல வழக்கமான வர்ணங்கள் நாயகி நாயகனைப்பற்றி சகியிடம் கூறுவதாக அமைந்திருக்கும். அன்றைய வர்ணத்தில் "என்னை வரச் சொல்லி ஏங்க வைத்து அவள் எங்கே சென்றாளடா....." என்று நாயகியை விழித்து பாடுவதாக அமைந்திருந்தமை வித்தியாசமாக அமைந்திருந்தது. அதன் நட்டுவாங்கத்தினையும் ஜதிச் சொற்கட்டுகளுடன் மிக லாவகமாக லகிபன் செய்திருந்தார். நிமலன், தீபனா உட்பட அரங்கேற்றம் கண்ட பதினொரு ஆற்றுகைக்கலைஞர்கள் அழகாக அபிநயித்து ஆடியிருந்தமை மிக அழகாக இருந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

---

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
vi[illegible]kthiyar@gmail.com

**பா. சதீசன்,**
**கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** சங்கு சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியின் சின்னமாக தேர்தல்கள் திணைக்களம் அங்கீகரித்துள்ளது. இதனால், வரும் பாராளுமன்றத் தேர்தலில் அந்தக் கூட்டணி சங்கு சின்னத்திலேயே களமிறங்கவுள்ளது என்று ஒரு செய்தி பார்த்தேன். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் களமிறங்கிய போது, அந்தச் சின்னத்தையோ அல்லது வேட்பாளரோ தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என்று அறிவித்திருந்தார்களே. ஆனால் இப்படி சின்னத்தை ஒரு கட்சி தமதாக்கிவிட்டது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று நினைக்கின்றீர்களா?.

**வியுக்தியார்:** அது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று இங்கே வாதிடப்போவதில்லை. ஆனால், கடந்த 26ம் திகதி தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பு சந்தித்து இதுகுறித்து ஆராய்ந்தபோது, அந்தக் கட்டமைப்பில் அங்கம் வகித்த ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஏனைய தமிழ் கட்சிகள் விரும்பாததால், அந்த சின்னத்தை மாற்றி சங்கு சின்னமாக போட்டியிடுவதெனில் தாம் தயாராக இருப்பதாக - அதாவது தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பாக போட்டியிட சம்மதம் தெரிவித்ததால், அவ்வாறு குத்துவிளக்கை சங்காக மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டதாக ஒரு செய்தியை மறுநாள் ஈழநாடுவில் பார்த்தேன். ஆனால் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகித்த பொதுச்சபையினர் தாம் தேர்தல் அரசியலில் கலந்துகொள்வதா இல்லையா என்பதை தீர்மானிக்க இரண்டுநாள் அவகாசம் கேட்டதாகவும் அந்தச் செய்தியில் அறியமுடிந்தது. ஆனால் இரண்டு நாட்களின் பின்னர் கூடிய பொதுச்சபையோ தேர்தலில் பங்குகொள்வதில்லை என்றும், சங்கு சின்னத்தை பயன்படுத்துவதில்லை என்றும் தீர்மானித்தது. பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகளின் ஆதரவை பெற்று பொதுக்கட்டமைப்பை உருவாக்கிய பொதுச்சபை, இந்த முடிவை எடுப்பதற்கு முன்னதாக அரசியல் கட்சிகளையும் கலந்து பேசி முடிவெடுத்திருக்கலாம். 26ம் திகதி கூட்டத்தின் முடிவைத்தொடந்து தமது சின்னத்தை மாற்றுவதற்கு உடனடியாகவே ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு விண்ணப்பித்து விட்டதால், அது இப்போது அவர்களின் சின்னமாகியிருக்கின்றது. அவர்கள் அதனை பெற்றிருக்காவிட்டால், இந்த தேர்தல் அறிவிக்கப்பட்டதும் வேறு எந்த ஒரு கட்சியும், அதாவது தமிழ் தேசியத்திற்கு எதிரான கட்சி ஒன்று கூட தமது சின்னமாக சங்கை கோரி விண்ணப்பித்திருந்தால் அது இன்று அவர்களின் சின்னமாக மாறியிருக்கும். இனி இந்த தேர்தலில் அதனை பயன்படுத்துவதா இல்லையா என்பதை பொதுக்கட்டமைப்பு மீண்டும் கூடி பேசி ஒரு பொருத்தமான முடிவுக்கு வரலாம்தானே.

**சி. சதீஸ்குமார்,**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

**கேள்வி:** எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், சார்ள்ஸ் நிமலநாதன் ஆகியோர் தனித்தனியாக அறிவித்துள்ளனரே என்ன காரணமாக இருக்கும்?.

**வியுக்தியார்:** இதற்கு எல்லாம் எதற்காக காரணத்தைத் தோடுகிறீர்கள்?. அடுத்த தேர்தலில் வெற்றிபெற மாட்டோம் என்பது அவர்களுக்கு நன்றாக தெரிந்துவிட்டது ஒரு காரணமாக இருக்கலாம். அதைவிட முக்கியமானது, இப்போதெல்லாம் தேர்தலில் போட்டியிடுவதெனில் பெருந்தொகை பணத்தை செலவிட வேண்டியிருக்கின்றது. கடந்த காலத்தில் சேர்த்ததை எதற்காக செலவிடுவான் என்று முடிவெடுத்திருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

**த. பிரதீபன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

**கேள்வி:** புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என்று புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளாரே. புதிய அரசாங்கம் இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** இந்த நாட்டில் இனப்பிரச்னை என்ற ஒன்றே இல்லை என்று கூறிவந்த கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதி ஆக வந்தபோது, அவருடனும் பேசித்தான் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என்று நம்பியவர்கள் நாங்கள். இப்போது புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கின்ற ஜேவிபி பற்றி பல கசப்பான அனுபவங்கள் நமக்கு இருந்தாலும், அவர்கள் இப்போது புதிய இரத்தம் பாய்ச்சியவர்களாக ஆட்சிக்கு, தேசிய மக்கள் சக்தியாக வந்திருப்பதால், நம்பித்தான் பார்ப்போமே. எதுவானாலும் அடுத்த தேர்தலில் அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தால்தான் அவர்கள் நினைப்பது எதனையும் செய்யமுடியும் என்பதால், வடக்கு கிழக்கிலும் கணிசமான ஆதரவைப் பெற்றால்தான் மூன்றில் இரண்டை எட்டமுடியும். அதனால் அவர்கள் இது [illegible] எதிர்பார்க்கப்படுகிறதே.

**ச. துவாரகன், பூந்தோட்டம், வவுனியா**

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் ஒன்றிணைவதற்கான அழைப்பு எதுவும் எங்களுக்கு வரவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே. ஆனால் தமிழ் அரசு கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இணையலாம் என்று கோரிக்கை விடுத்திருந்ததே?

**வியுக்தியார்:** தமிழ் அரசு அழைப்பு விடுத்தது உண்மைதான். ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்வதும் உண்மைதான். தமிழ் அரசு கோரிக்கை விடுத்தது ஊடக-சந்திப்பின் ஊடாக மட்டுமே அன்றி, எழுத்து மூலமாக - கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கவில்லையே. அப்படி விடுத்தால் தானே அவரிடம் அழைப்பு விடுத்ததாக கொள்ளலாம். தமிழ் அரசு எந்தக் கோரிக்கையைத்தான் அப்படி உத்தியோகபூர்வமாக முறைப்படி விடுத்திருக்கின்றது. இது பொன்னம்பலத்திற்கும் தெரியாததா என்ன? இருந்தாலும் அவர் முறைப்படி கோரவில்லை என்று சொல்வது நியாயமானதுதான்.

**எஸ். நிதர்சன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்**

**கேள்வி:** புதிய ஜனாதிபதியின் போக்கு திருப்திகரமாக இருக்கிறது. அவர் தமிழ் மக்களை தேசமாக அங்கீகரித்து செயற்பட்டால், அவருடன் இணைந்து பயணிப்போம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் ஜனாதிபதியுடன் இணைந்து பயணிப்பது இருக்கட்டும், அடுத்த தேர்தலின் பின்னரும் அவருடன்- அதாவது விக்கினேஸ்வரனுடன் தமிழ் மக்கள் இணைந்து பயணிக்கிறார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போமே.

**கே. இரவிந்திரராசா,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** வெற்றி பெற்றவர்களிடம் மட்டும் பொறுப்புகளை ஒப்படைப்பது வங்குரோத்தான நாட்டுக்கு ஏற்புடையதல்ல என்றும் இதற்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்றும் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் எதிர்க்கட்சி முன்னோடியான வேலைத்திட்டத்தைக் கொண்டிருக்கிறது, அதிலிருந்து பின்வாங்க முடியாது எனவும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறாரே.

**வியுக்தியார்:** வெற்றிபெற்றவர்களிடம் மட்டும் பொறுப்புக்களை ஒப்படைக்க முடியாது என்பது சரியானதுதான். ஆனால் அதற்காக அனைவரும் கை கோர்க்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுப்பது தான் புரியவில்லை. அடுத்த பாராளுமன்ற தேர்தலில் ஓரணியாக போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் அதனோடு இணைந்த அணியினரும் பேச்சுவார்த்தை நடாத்தியபோது பல்வேறு நிபந்தனைகளை விதித்து அதனை இவரே குழப்பிவிட்டதாக அண்மையில் ராஜித சேனரத்ன கூறியிருந்தாரே. நாட்டின் மீது உண்மையான பற்று இருந்தால் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து எதிரணிகள் ஒன்றாக இணைவதற்கும் அவர் முன்வந்திருக்க வேண்டும் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரியாவில் வலதுசாரி கட்சி வெற்றி: ஐரோப்பாவில் தலையெடுக்கும் வலதுசாரி போக்கு:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆஸ்திரியாவின் தீவிர வலதுசாரி சுதந்திரக் கட்சி (குழு) நடந்து முடிந்த தேர்தலில் தேசிய அளவில் வெற்றி பெற்றுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தீவிர வலதுசாரி கட்சிக்கு கிடைத்த முதல் வெற்றியை இது குறிக்கிறது. இக்கட்சி நாஜி படைவீரர்களால் நிறுவப்பட்ட சுதந்திரக் கட்சியாகவும் விளங்குகிறது.

ஆஸ்திரிய பாராளுமன்ற தேர்தலில் ஹெர்பர்ட் கிக்ல் தலைமையிலான சுதந்திரக் கட்சி 29.2 வீத வாக்குகளைப் பெற்றது. மத்திய - வலது ஆஸ்திரிய மக்கள் கட்சி 26.5 வீதம் மற்றும் சமூக ஜனநாயகக் கட்சியினர் 21 வீத வாக்குகளைப் பெற்றனர்.

ஆஸ்திரியாவின் சுதந்திரக் கட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை 29.9.24 நாட்டின் பொதுத் தேர்தலில் ஆளும் பழமைவாத கட்சியைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளமை, ஐரோப்பாவில் தீவிரமாக தலையெடுக்கும் வலதுசாரி போக்கின் வெளிப்பாடகவே கருதப்படுகிறது.

**தீவிர வலதுசாரிகளின் முதல் வெற்றி**

பத்து மில்லியன் மக்கள் வசிக்கும் ஆஸ்திரிய நாட்டில் அதிக பணவீக்கம், உக்ரேன் - ரஷ்யப் போர் மற்றும் கோவிட் - 19 தொற்றுநோய் ஆகியன பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. இதனால் அந்நாட்டு மக்கள் ஆளும் கட்சி மீது பெரும் விரக்தியில் இருந்துள்ளனர்.

இத்தேர்தலின் மூலமே இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஆஸ்திரியாவின் தீவிர வலதுசாரிக் கட்சி பெற்றுக் கொண்ட முதல் வெற்றி இதுவாகும்.

வெளியேறும் அரசாங்கமான நெஹாமரின் கட்சி மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைவாதிகளின் கூட்டணியானது நாடாளுமன்றத்தின் கீழ் அவையில் பெரும்பான்மையை இழந்தது.

2021 முதல் சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்கிய முன்னாள் உள்துறை அமைச்சரும் நீண்டகால பிரச்சாரருமான ஹெர்பர்ட் கிக்ல் ஜனாதிபதியாக உள்ளார். ஆனால் ஆஸ்திரியாவின் புதிய தலைவராவதற்கு, அவருக்கு நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஒரு கூட்டணிக் கட்சி தேவை. அரசாங்கத்தில் கிக்லுடன் இணைந்து பணியாற்ற மாட்டோம் என்று மற்றய போட்டியாளர்கள் கூறியுள்ளனர்.

தேசியவாத, குடியேற்றத்திற்கு எதிரான கட்சிகளுக்கு பிரபல்யம் அதிகரித்து வருகிறது. பணவீக்கம், புலம்பெயர்ந்த மக்கள் தொகை அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளில் பொதுமக்களின் விரக்தியால் இது தூண்டப்பட்டதாகும். இதன் விளைவே தற்போது ஐரோப்பவில் தீவிர வலதுசாரி போக்கும், ஆஸ்திரியாவின் தீவிர வலத்சாரி வெற்றியானது பரந்த ஐரோப்பிய போக்கை பிரதிபலிக்கிறது.

ஆஸ்திரியா நாட்டின் எல்லைகளை மூடுவதற்கான சபதத்தில் இக்கட்சி பிரச்சாரம் செய்ததன் மூலம், சுதந்திர




"ஆஸ்திரியா நாட்டின் எல்லைகளை மூடுவதற்கு சுதந்திர கட்சி பிரச்சாரம் செய்வதுடன், அதன் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான நிலைப்பாட்டால் பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது"

கட்சி அதன் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான, தேசியவாத சொல்லாட்சிக்காக பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது.

அத்துடன் ஆஸ்திரியல்லாத பிரஜைகளின் கட்டாய குடியேற்றம் மற்றும் புகலிடச் சட்டங்கள் மீது கடுமையான கட்டுப்பாடு உட்பட, குடியேற்றத்தை ஒடுக்குவதற்கு சுதந்திரக் கட்சி உறுதியளித்துள்ளது.

இதேவேளை கட்சித் தலைவர் ஆஸ்திரியாவை "வோல்க்ஸ்கான்ஸ்லர்" அல்லது மக்களின் அதிபராக வழி நடத்துவதாக உறுதியளித்துள்ளார். இது அடோல்ஃப் ஹிட்லரைக் குறிக்க ஜெர்மன் நாஜி கட்சியால் பயன்படுத்தப்பட்ட சொல்லாடலாகும்.

அவரது பிரச்சாரம் குடியேற்றத்தை கட்டுப்படுத்துவது, ரஷ்யா மீதான ஐரோப்பிய ஒன்றிய கொள்கைகளில் இருந்து ஆஸ்திரியாவை விலக்குவது போன்ற வாக்குறுதிகளுடன், தேசியவாத உணர்வில் பெரிதும் சாய்ந்திருந்தது.

ஆஸ்திரியாவின் வாக்குகளின் முடிவுகள் அண்டை நாடான ஜேர்மனியில், ஜேர்மனிக்கான தீவிர வலதுசாரி மாற்றுக் கட்சியான யுகனு சமீபத்திய தேர்தல்களில் காணப்பட்ட போக்கை பெரிதும் பிரதிபலிக்கிறது.

(AFD) கட்சி குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது. ஜேர்மனியின் மாநிலத் தேர்தல்களில் கிராமப்புறங்களில் பெரிய வெற்றியைப் பெற்றது. துரிங்கியா மற்றும் சாக்சோனி மாநிலங்களில் 30 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றது.

**ஐரோப்பாவில் தீவிர வலதுசாரிகள்**

ஐரோப்பா முழுவதும் வலதுசாரி அரசியல் கட்சிகளின் செல்வாக்கு வெகுவேகமாக உயர்ந்து வருகிறது. தாராளவாத ஜனநாயகத்துக்கு இது மிகப்பெரிய ஆபத்து என்று பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட இனம், மதம், நிறம், ஜாதியே உயர்ந்தது என்ற கொள்கை வைத்திருப்பவர்கள், குறிப்பிட்ட மதத்தை வெறுப்பது, சமூக நலத் திட்டங்களில் அரசாங்கம் செலவு செய்யக்கூடாது என்று நினைப்பது, சமத்துவம், சமூக நீதி, தொழிலாளர் உரிமை ஆகியவற்றை வெறுப்பது, பழமைவாதத்தை விரும்புவது, வெளிநாட்டில் இருந்துவந்து குடியேறுகிறவர்களுக்கு தன் நாட்டில் இடம் தரக்கூடாது என்பதே வலதுசாரிகளின் முக்கிய கோட்பாடாகும்.

குடியேறிகளுக்கு உரிமைகள் தரக்கூடாது என நினைப்பது, மிதமிஞ்சிய தேசியவாதம் போன்றவை வலதுசாரிகளின் கொள்கையாகும். இவற்றை தங்கள் கொள்கையாக கொண்டு செயல்படும் அரசியல் கட்சிகள், தனிநபர்களை வலதுசாரிகள் என்பார்கள். இவற்றுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டிருப்பவர்கள் இடதுசாரிகள். இது ஒரு பொதுப் படையான விளக்கம்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, எந்த அரசியல் கட்சியாவது தீவிர வலதுசாரிக் கோட்பாடுகளைப் பேசினால் அவற்றை மைய நீரோட்டக் கட்சிகள் அருகே சேர்ப்பதில்லை. ஊடகங்கள் அவற்றை எச்சரிக்கையோடு அணுகின.

மிதமான பழமைவாதமும், மிதமான வலதுசாரிப் பார்வையும் கொண்ட கட்சிகள் ஐரோப்பிய மைய நீரோட்டத்தில் இருக்கவே செய்தன. இவற்றை மைய நீரோட்ட வலதுசாரிகள் என்று அழைத்தார்கள்.

இன வெறுப்பை அடிப்படையாக கொண்டு புதிதாக முளைக்கும் நியோ நாசிஸ்டுகள் போன்ற தீவிர வலதுசாரிகளை, வாக்காளர்களும் நீண்ட காலமாக ஐரோப்பாவில் ஓரம்கட்டியே வைத்திருந்தனர்.

குறைந்தளவு வாக்குகளைப் பெறுவதே அவர்களுக்குப் பெரிய போராட்டமாக இருந்தது. ஆனால், படிப்படியாக இந்நிலை மாறி இப்போது பல ஐரோப்பிய நாடுகளில் அவர்கள் மைய நீரோட்டக் கட்சிகளாக மாறிவருகின்றனர்.

அத்துடன் வலதுசாரிகள் பல ஐரோப்பிய நாடுகளில் அதிகாரத்தைப் பிடித்




துள்ளனர். தொடர்ந்தும் பல நாடுகளில் அதிகாரத்தைப் பிடிக்கும் நிலையில் இருக்கிறார்கள்.

**நாஜி படைவீரர்களின் நிறுவப்பட்ட சுதந்திரக் கட்சி**

1950 களில் நாஜி படைவீரர்களின் குழுவால் நிறுவப்பட்ட ஆஸ்திரியாவின் தீவிர வலதுசாரி சுதந்திரக் கட்சி, தற்போது ஒரு கூட்டணி அரசாங்கத்தை வழிநடத்தும் மைய வலது ஆஸ்திரிய மக்கள் கட்சியைத் தோற்கடித்துள்ளது.

இந்நிலையில் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் சுதந்திரக் கட்சி வாக்குகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்ததாகவும், ஜனாதிபதி கார்ல் நெஹாமரின் ஆஸ்திரிய மக்கள் கட்சி இரண்டாவது இடத்தைப் பிடித்ததாகவும் தெரிவித்தது. மத்திய - இடது சமூக ஜனநாயகவாதிகள் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.

ஆஸ்திரியாவின் தீவிர வலதுசாரி சுதந்திரக் கட்சி வெற்றியை நோக்கி முன்னேறியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முதல் முறையாக தீவிர வலதுசாரி கட்சி தேசிய தேர்தலில் வெற்றி பெற்றதுள்ளமை ஐரோப்பிய ஜனநாயகத்தின் எதிர்காலத்தை அச்சமுற வைத்துள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி ஆணையாளர் உட்பட மூவர் இலஞ்ச குற்றச்சாட்டில் கைதாகினர்

கொழும்பு, ஒக். 06

மூன்று பேருந்துகளின் உரிமையை மாற்றுவதற்கு 3 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உட்பட மூவர் கைதாகினர்

இவர்கள் கொழும்பு நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகத்தில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளருடன் அந்தத் திணைக்களத்தில் பணிபுரியும் இரண்டு ஊழியர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபரான போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தன்னிடமிருந்த இலஞ்சம் பெற்ற பணத்தைக் கிழித்தெறிய முயன்றதாக அறியக்கிடைத்துள்ளது.

(எ)

# படோவிட்ட அசங்கவின் 2 உதவியாளர்கள் கைது

கொழும்பு, ஒக். 06

பாதாள உலகக் கும்பலை சேர்ந்த வரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான படோவிட்ட அசங்கவின் உதவியாளர்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதவல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் சிக்கினர்.

தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 24 வயது நபரும், 67 வயதுடைய பெண்ணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்களிடம் இருந்து 06 கிராம் 950 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 01 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 40 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

(எ)

# வெள்ளை வான் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 06

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலிருந்து பிரதிவாதிகளை விடுவிப்பதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பான உத்தரவு எதிர்வரும் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ராஜித சேனாரத்ன மற்றும் இருவர் வெள்ளை வான்களில் ஆட்கள் கடத்தப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பாதகமான முறையில் செயல்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

(எ)

# செந்தில் பாலாஜியும்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்களுக்குச் சில விஷயங்கள் மட்டும் தெரியாமலேயே போய் விடுகின்றன. எத்தகைய அளவுகோல்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதும் புரிவதில்லை.

செந்தில் பாலாஜியைப் போல, சிதம்பரத்தைப் போல, ஆ. இராசாவைப் போல எத்தனை பேரால், எளிய மக்களால் பிணை தேடி உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாட முடியும்? போராட முடியும்? எல்லாரும் மனிதர்கள்தானே? சிறைகளில் இருக்கும் இத்தனை லட்சம் விசாரணைக் கைதிகளுக்கான தீர்ப்பு எப்போது?.

சிறையிலிருந்து வெளிவரும் செந்தில் பாலாஜியை வரவேற்று, 'எமர்ஜென்சி காலத்தில்கூட இவ்வளவு நாட்கள் சிறை வாழ்க்கை கிடையாது. அரசியல் சதிச் செயல்கள் 15 மாதங்கள் தொடர்ந்தன. கைது செய்து சிறையிலேயே வைத்து விடுவதால் சகோதரர் செந்தில் பாலாஜியின் உறுதியைக் குலைக்க நினைத்தார்கள். முன்னிலும் உரம் பெற்றவராய்ச் சிறையில் இருந்து வெளியில் வரும் சகோதரர் செந்தில் பாலாஜியை வருக வருக என வரவேற்கிறேன். உன் தியாகம் பெரிது! உறுதி அதனினும் பெரிது!' என்று செய்தி வெளியிட்டார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.

சிறையிலிருந்து வரும் செந்தில் பாலாஜியைக் கட்சித் தலைவர் என்ற முறையில் ஸ்டாலின் வரவேற்பதை யாரும் விமர்சிக்க மாட்டார்கள். ஆனால், எதற்காக எமர்ஜென்சி காலத்தில்கூட இவ்வளவு நாள்கள் சிறை வாழ்க்கை கிடையாது என்று ஒப்பிட்டார் என்பது புரியாமல்தான் பலரும் திகைத்திருக்கின்றனர், எமர்ஜென்சியில் திமுகவினர் சிறை சென்றதும் இப்போது செந்தில் பாலாஜி சிறை சென்றுவருவதும் ஒன்றா? என வியந்து!.

# தெற்கின் மாற்றத்துக்குள்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தமிழர்களின் அரசியல் ஒரு திருப்பு முனையில் வந்து நிற்கிறது. மாற்றத்தின் பெயரால் சிங்கள பௌத்த தேசியத்துடன் தமிழர்கள் கரைந்து போவதா? அல்லது தெற்கிலேற்பட்ட மாற்றம் போல சிந்தனையிலும் செயற்பாட்டிலும் தமிழர் தரப்பிலும் மாற்றம் ஏற்பட்டு, தமிழர்கள் ஒன்றுபட்டு பலமாக எழுந்து, தமது தனித்துவத்தை பேணும் அதேவேளை தெற்கு மாற்றத்துடன் இணைந்து செல்வதா? என்பதாகும். இந்த நாட்டின் தமிழன் அதன் ஒரு சமத்துவமான குடிமகன் என்று உணரும்போதே மட்டுமே அவன் தன்னை இலங்கையன் என்பதையும் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்வான். அதுவரை அவன் தமிழனாகவே சிந்திக்க வேண்டும். தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று. உன் அண்டைவீட்டானுடனான உறவு எவ்வளவு நெருக்கமாயினும் எல்லைவேலியை அகற்றவேண்டாம் என்பது. தமிழ் மக்கள் தங்கள் வேலியை அகற்றி இலங்கையர் என்ற பிரதேசத்துக்குள் உலாவத் தயாராகவே உள்ளனர். அதற்கு முன்னர் அது அவர்களுக்குச் சொந்தமான காணியே என்பதுவும் அதை ஆண்டு அனுபவிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டென்பதுவும் முதலில் ஏற்கப்படவேண்டும். அதன் பின்னர் தமிழர்கள் இலங்கையராகத் தம்மை வெளிப்படுத்துவர். எனவே தமிழ் மக்களைத் தேசியக்கட்சிகளுக்குள் கரைக்க விரும்புவோர் அதற்குப்பதிலாக முதலில் தமது தேசியக்கட்சிகளை ஒன்றிணைத்து இதனைச் செய்வதே பொருத்தமானதாகும்.

# அநுர - தேசிய மக்கள் சக்தியின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளை விடவும் அது விடயத்தில் தேசிய மக்கள் சக்தி பெருமளவுக்கு அனுகூலமான நிலையில் இருக்கிறது.

பொதுவில் அரசியல்வாதிகளை பழிபாவத்துக்கு அஞ்சாத ஒரு கூட்டமாகவே மக்கள் பார்க்கிறார்கள். இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சியின் போது ராஜபக்சாக்களும் அவர்களுடன் இருப்பவர்களும் மாத்திரமல்ல, 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்கு போகவேண்டும் என்று மக்கள் குரலெழுப்பியதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

மிகவும் சுலபமாக குறுகிய காலத்திற்குள் பெருமளவு சொத்துக்களை குவிக்கக்கூடிய ஒரு மார்க்கமாக இன்று அரசியல் விளங்குகிறது. அந்த கெடுதியான அரசியல் கலாசாரத்தை மாற்றுவதை நோக்கிய முதற்படியாக எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை மக்களினால் நிச்சயமாக பயன்படுத்தமுடியும்.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் ஐக்கியம் பற்றி உரத்துப்பேசிய வண்ணம் தொடர்ந்து பிளவுபட்டுக் கொண்டு போகின்றன. எந்தவொரு கட்சிக்குள்ளும் ஒழுங்கு கட்டுப்பாடு என்பது மருந்துக்கும் கிடையாது. கட்சிகளின் உண்மையான நிலைப்பாட்டை எவர் பேசுகிறார் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் தமிழ் மக்கள் தடுமாறுகிறார்கள்.

ஏற்கெனவே சிதறுப்பட்டுக்கிடக்கும் இலங்கை தமிழ் அரசியல் சமுதாயம் ஒன்றுபடுவதற்கான எந்த சாத்தியத்தையும் எதிர்பார்க்க முடியாது. தலைவர்கள் எனப்படுவோரின் அகம்பாவமே தலைதூக்கி நிற்கிறது.

இலங்கை தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாட்டை தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் கூறுவதற்காக ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு என்ற இயக்கத்திற்குள் தேர்தல் முடிந்து இரு வாரங்களுக்குள்ளாகவே பாராளுமன்ற தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் தொடர்பில் முரண்பாடுகள் தோன்றிவிட்டன.

இலங்கை தமிழர் அரசியலை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற விபரீதமான முனைப்புடன் செயற்படும் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் உள்ள சில குழுக்களும் தனவந்தர்களும் வடக்கு, கிழக்கு அரசியலை ஊழல்தனமானதாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு கட்டுறுதியான ஒரு பிரதிநிதித்துவம் இல்லாமல் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது.

காலம் வேண்டி நிற்பதற்கு ஏற்றமுறையில் உருப்படியான எந்த அணுகுமுறையையும் கடைப்பிடிக்காமல் வெறுமனே தீவிர தேசியவாத சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் மீது மக்கள் கடுமையாக வெறுப்படைந்திருக்கிறார்கள்.

தென்னிலங்கையில் மக்கள் பாரம்பரியமான அரசியல் கட்சிகளையும் தலைவர்களையும் நிராகரிக்கத் தொடங்கியிருப்பதைப் போன்று வடக்கு, கிழக்கிலும் ஒரு நிராகரிப்பு காலத்தின் தேவையாகிறது.

ஒரு மாற்றமாக பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது குறித்து தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் சிந்திக்கத் தொடங்கியிருப்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. ஒட்டுமொத்தத்தில் அநுரா குமார திசநாயக்கவினதும் தேசிய மக்கள் சக்தியினதும் இலங்கையின் சகல அரசியல் கட்சிகளின் அணுகுமுறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். •

# ஜேர்மனி ஆடல் கலாலயத்தின்...

(12ஆம் பக்கம் பார்க்க)

பக்கவாத்திய கலைஞர்களின் பங்களிப்பு இந்நிகழ் வின் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இளம் கலைஞர்களான லகிபன், அனுஷாந் தாளவாத்தியங்களையும், பிரசாந் வயலினையும், நிருஜன், தாரணி குரல் இசையையும், வர்ணன் புல்லாங்குழல் இசையையும் லாவகமாக, சிறப்பாக வழங்கியிருந்தார்கள். சில நடன நிகழ்சிகளை ஹரிஷ் ரஞ்சித் அவர்களின் சுரத்தட்டு இசையும் இணைந்து மெருகேற்றியிருந்தன. பக்கவாத்தி யங்கள், நட்டுவாங்கத்தின் ஒருங்கிணைந்த தன்மை ஆற்றுகை செய்த கலைஞர்களுக்கு உந்துசக்தியைக் கொடுத்து மெருகேற்றின என்றால் அது மிகையாகாது. அது அவையோரையும் பரவசப்படுத்தியது எனலாம்.

ஆடற்கலாலயத்தில் றெஜினி ஆசிரியரிடம் பயின்று இப்பொழுது ஆசிரியர்களாக கடமையாற்றுகின்ற தீபனா, அபிரா, ரோஷிகா, ராதிகா, தர்ஷிகா, சுவேதா, ராஸ்மிகா ஆகியோர் இணைந்து நிகழ்வுகளை தயாரித்து, நட்டுவாங்கம் செய்தமை பாராட்டு தற்குரிய விடயமாகும். இது இக்கலாலயத்தின் வளர்ச்சியின் அடுத்த கட்ட படிநிலை எனக் கூறலாம்.

பிரதவிருந்தினர் சிம்ரன் சிவகுமார் அவர்கள் தன் உரையில் நிகழ்ச்சிகள் சிறப்பாக உள்ளன. நட்டுவாங்கம், பக்க வாத்தியக்காரர்களின் பங்களிப்பு அருமையாக உள்ளன என்று பாராட்டினார். புலம்பெயர் தேசத்தில் பரத நாட்டியம் அழகாக வளர்கின்றது என்றும் தன்னை இங்கு அழைத்தமைக்கு நன்றியும் கூறினார். தொடர்ந்து அவர் ஒரு பதத்தினை அழகான பாவத்துடன் ஆற்றுகை நிகழ்த்திக் காட்டினார்.

சிறப்புவிருந்தினர் சாந்தினி துரையரங்கன் நடந்த நிகழ்ச்சிகளை தொகுத்து கூறியதுடன் அவற்றில் உள்ள சிறப்புத்தன்மைகளையும் எடுத்துக் கூறினார்.

ஆடற்கலாலயத்தின் 35 வது ஆண்டு விழா கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களாக சிறப்பாக நடைபெற்றது. ஒரு நடன நிறுவனத்தின் ஆண்டுவிழா தொடர்ச்சியாக நீண்டநேரம் இடம்பெற்றமை என்பது தனித்துவமே. அதுவும் 6 தொடக்கம் 60 வயதுவரையிலான நடனத்தாரகைகள் நடனம் புரிந்தது ஒரு உலக சாதனை என்றே கூறலாம்.

கலைஞர்களின் ஒப்பனை, ஆடைகளின் வடிவமைப்புகள் நேர்த்தியாக இருந்தன. அரங்க ஒலி ஒளி அமைப்புகள் நன்று. ஆசிரியர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் எல்லோரினதும் உற்சாகமாக பங்களிப்பு போற்றுதற்குரியதாகும். பார்ப்பதற்கு கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாக நிகழ்வுகள் அமைந்திருந்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அருந்தவபாலனுக்கு...

தெரியப்படுத்தியுள்ளார். இதற்கு அவர் கட்சியில் இருந்தபோது தலைவரான தம்மை விமர்சித்த மையே காரணம் என்று கூறியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

அவரின் இந்த முடிவுக்கு கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்து எழுந்த கருத்து முரண்பாடுகளால் கட்சியிலிருந்து மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் பதவி விலகியுள்ளனர் என்று அறிவருகிறது.

இதனிடையே மணிவண்ணன் தரப்பை சேர்ந்தவர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் அதிக இடம் ஒதுக்கப்படுவதாகக் கூறி கட்சியின் ஆரம்பகால மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் கட்சியின் தலைமையுடன் முரண்பட்டுள்ள அதேசமயம் சிலர் கட்சியை விட்டும் விலகியுள்ளனர் என்றும் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## மோடியை...

விரைவில் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-

ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பதவிக்காலம் ஆரம்பிக்கும் தறுவாயில் இந்நாட்டுக்கு வருகைத்தர கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அவர், ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்திய - இலங்கை உறவுகளைப் பல்வேறு துறைகளூடாக பலப்படுத்திக்கொள்வது குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்தார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை, முதலீடுகள், மின்சக்தி மற்றும் வலுசக்தி, பால் சார்ந்த உற்பத்தித் துறை என்பவை தொடர்பில் இந்தியா கொண்டிருக்கும் அக்கறையை வலியுறுத்திய அவர், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

அதற்கமைய இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்காக இந்தியாவின் பாரிய சந்தை வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியின் போது இந்திய வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்தியாவுடனான தொடர்ப்புகளைத் தொடர்ந்தும் பேணுவதில் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை போன்ற இரு தரப்பும் அக்கறை காட்டும் விடயங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கூறியதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார். - என்றுள்ளது. (அ)

## செல்வம்...

இதேவேளை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் க. சிவனேசன், கரைதுறைபற்று பிரதேச சபை முன்னாள் தவிசாளர் க. விஜிந்தன், வர்த்தகரான அ.ரோஜர், முன்னாள் போராளியான கருணாநிதி ஜசோதினி ஆகியோரும் போட்டியிடவுள்ளனர். (அ)

## யோஷித...

யோஷித ராஜபக்ஷவுக்கும் 7 துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றின் மொத்த எண்ணிக்கை 24 ஆகும். எம்.எம். 9 ரக 16 துப்பாக்கிகளும் அதில் உள்ளடங்குகின்றன. இந்த துப்பாக்கிகளை விரைவில் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் மீள வழங்கவில்லையெனில் 1916ஆண்டு 33 இலக்க துப்பாக்கி கட்டளை சட்டத் திற்கமைய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

துப்பாக்கிகளுக்கு சொந்தமான ரவைகளை கடற்படைக்குச் சொந்தமான வெலிசறையில் அமைந்துள்ள களஞ்சிய சாலைக்கு குறித்த தினத்துக்கு முன்னர் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. (அ)

## ஒரு தேசிய...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பொதுக்கட்டமைப்பு தொடர்ந்தும் பணியாற்றும் என்பதை நாம் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் இந்த பாராளுமன்றத் தேர்தலை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பூடாக சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவுகள் விரைவில் அறிவிப்போம்.

நாங்கள் பிரிந்து நிற்பதால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இடங்களை இழந்துவிடும் நிலை இருக்கிறது. கடந்த முறை அம்பாறையில் அந்த இடத்தை இழந்திருக்கின்றோம். எனவே அங்கு தமிழ்ப் பிரதிநிதுத்துவத்தினை காப்பாற்றுவதற்கான இரண்டு வழிமுறைகளை தமிழரசுக்கட்சிக்கு கூறியிருக்கின்றோம்.


இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டிருந்தோம். எனவே இரு தரப்பும் இணைந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும்போதே அந்த பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். எனவே 7ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோகபூர்வமான பதிலை அறிவிக்குமாறு நாம் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

திருகோணமலையில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறையில் சங்குச் சின்னத்திலும் தேர்தலை கேட்கலாம் என நாம் முன்னர் பேசியிருந்தோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது அனைத்து இடங்களிலும் தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுவதாகக் கூறுகிறார்கள். அது நடந்தால் இந்த மாவட்டங்களின் ஆசனங்கள் இழக்கப்படும் நிலையே ஏற்படும்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஐந்து கட்சிகள் மற்றும் 36 இற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி இந்த முடிவிற்கு வந்துள்ளார்கள்.

மாறாக எல்லா இடத்திலும் தாங்களே நிற்கவேண்டும் என்றால் இது பிடிவாதமே. தங்களுக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை கூட்டிக்கொள்வதே அவர்களது நோக்கம். ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக இரண்டு ஆசனங்களை இழக்கப்போகின்றார்கள். இதுபோல ஒரு முட்டாள்தனமான முடிவு எதுவும் இருக்காது- என்றார். (அ)

# காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயமாக்க 61.5 மில். டொலர



கொழும்பு, ஒக். 06

இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி, காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயமாக்கும் நடவடிக்கைகளுக்காக 61.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இந்தியா வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை ரயில் திணைக்களத்துக்கு 22 டீசல் இயந்திரங்களைப் பரிசாக வழங்குவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிசக்தி, வலுசக்தி, சுகாதாரம், சுற்றுலா, பால்வள மேம்பாடு மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இலங்கைக்கான விஜயத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடியுள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஆட்சி...

நிலைப்பாடு என்னவாக இருக்கும் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிந்த லால்காந்த கூறியவை வருமாறு-

அவர்கள் (கூட்டமைப்பினர்) எம்முடன் கலந்துரையாடும் விடயங்கள் எவை என்பது பற்றி பரிசீலிக்க வேண்டும், அவற்றுக்கு நாம் இணங்குகின்றோமா அல்லது இல்லையா என்பது பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

எவர் வேண்டுமானாலும் எம்முடன் பேச்சு நடத்தலாம். ஆனால் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் எவை, மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அவை தடையாக உள்ளனவா, எமது கொள்கைகளுடன் ஒத்துபோகின்றனவா என்பன உள்ளிட்ட விடயங்கள் ஆராய்ந்த பின்னரே அது தொடர்பில் முடிவெடுக்கப்படும்."- என்றார் லால்காந்த. (அ)

## 80 வகை...

தொடர்பில் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய பல்வேறு சந்தர்ப் பங்களில் அதிகாரிகளிடம் வினவியுள்ளதுடன், நோயாளர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சிக்கல்களும் ஏற்படாத வகையில் அந்த நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## திருமலையில்...

மத்திய குழுவால் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் தெரிவுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. 11 பேர் அதில் கலந்து கொண்டோம். இதன்போது, வேட்பாளர் நியமனம் தொடர்பாக மாவட்ட ரீதியாக கலந்துரையாடினோம். எந்தவொரு மாவட்டத்தினதும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. அதனால் தெரிவிக்குழுக் கூட்டம் தொடர்ந்தும் நாளையும் (இன்று) இடம்பெறும். அதன் பின்னரே முடிவு வெளியிடப்படும்.

விசேடமாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டம் தொடர் பாக ஆராயப்பட்டது. குறித்த மாவட்டங்களில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவமேம வரக்கூடிய நிலைமை இருக்கிறது. கடந்த முறை அம்பாறை மாவட்டத்தில் நாம் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிட்டது. பல கட்சிகளும் போட்டியிட்டால் திருகோணமலையிலும் இம்முறை அதுவே நிகழும்.இதனால் அந்த இரு மாவட்களில் தமிழ் பிரதிநிதித்துவத்தை தக்க வைப்பதற்காக ஏணைய தமிழ் கட்சிகளுடனும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

விசேடமாக திருகோணமலை மாவட்டத்தில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக திருகோணமலை ஆயர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். அவருடன் இன்று (நேற்று) மாலை 4.30 இற்கு சந்திப்பு ஒன்று உள்ளது. அவரை சந்தித்து பேச ஒரு குழு திருகோணமலை செல்கின்றது. இவ்விரு மாவட்டங்களிலும் தமிழரசுக் கட்சியின் பெயரிலும், அதன் வீட்டுச் சின்னத்திலும் ஏனைய கட்சி வேட்பாளர்களையும் இணைத்து போட்டியிடமுடியும். இது தொடர்பாக அவதானம் செலுத்தி வருகின்றோம்.

அடுத்து, இம்முறை மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். இளையவர்கள், புதியவர்களை விரும்புகிறார்கள். எமக்கு கிடைத்த வேட்பாளர் பட்டியல்களில் பெண்களின் பெயர் குறைவாக உள்ளது. எமக்கு ஆர்வமுள்ள, திறமையான, செயறட்பாட்டு திறன் கொண்ட, எம்மோடு இணைந்து பயணிக்கக் கூடிய பெண்கள் தேவையாகவுள்ளது. நாம் அவர்களுக்கு போட்டியிட சந்தர்ப்பம் வழங்க தயாராகவுள்ளபோதும் பெண்கள் பலரும் முன்வரவில்லை. பெண்கள் அமைப்புக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் கடந்த முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதில்லை என மத்திய குழு எடுத்த தீர்மானத்தை எமது தெரிவுக் குழுவும் உறுதி செய்துள்ளது. எனவே அவர்களை தவிர்த்து புதிய வேட்பாளர்களையும், இளைஞர்களையும் களமிக்கவுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் மத்திய குழு எடுத்த தீர்மானத்தை மீறி சிறிதரன் மற்றும் சிறிநேசன் ஆகியோர் செயற்பட்டிருந்தனர். அதில் ஏற்கனவே போட்டியிட்டு தோல்வியுற்றவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லை என தீர்மானம் எடுக்கப்பட்டதால் சிறிநேசன் போட்டியிட முடியாது.

சிறிதரன் மத்திய குழுக் கூட்ட தீர்மானத்தை மீறி செயற்பட்டதால் அவரை போட்டியிட அனுமதிக்கக் கூடாது அல்லது அவராக விலகியிருக்க வேண்டும் என நான் கோரினேன். இதை மறுத்து தானும் போட்டியிடப் போவதாக சிறிதரன் தெரிவித்தார்.

இந்நிலையில் தெரிவுக் குழுவும் நாங்கள் இருவரும் போட்டியிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். அதற்கு அமைவாக நானும், சிறிதரனும் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவோம். நிச்சயமாக வெல்வோம். ஏனைய 7 பேரையும் இளைஞர்களாக களமிறக்குவோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஒரு எழுத்தில்கூட மாற்றமில்லை!

## கூறுகிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஒக். 06

**கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஒரு எழுத்தில் கூட மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியினர் சர்வதேச நாணய நிதியத்துடன், தொடர்புடைய விடயங்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற கருத்தையே தொடர்ச்சியாக முன்வைத்து வந்தனர். ஆனால் இந்த விடயத்தை தெரிவித்து நாட்டு மக்களை ஏமாற்ற வேண்டாம் என நாம் கூறினோம் .

இத்தகைய பின்னணியில் சர்வதேச நாணய நிதியத்தின் உயர் மட்டக்குழுவுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் ஒரு எழுத்தில் கூட மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. அதே போன்று திருடப்பட்ட கடன்கள் மீள செலுத்தப்படப்போவதில்லை எனவும் கூறினர். அந்த விடயத்திலும் எந்த மாற்றமும் ஏற்படுத்தப் படவில்லை.

தேர்தலுக்கு முன்னர் உடன்பட்ட விடயங்களில் ஒரு எழுத்தில் கூட மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் வெறுமனே பொய்யான கருத்துக்களை மாத்திரம் முன்வைத்துள்ளனர். எம்மாலும் இத்தகைய கருத்துக்களை கூறி இருக்கலாம் ஆனால் நாம் அவை யதார்த்தமான விடயங்கள் அல்ல என்பதால் கூறவில்லை.

இறுதியில் கடன்மறுசீரமைப்பு பற்றிவிடயத்திற்குஇணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது. ஆனால் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை- என்றார். (அ)

# மக்களை ஏமாற்றமாட்டோம்! தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 06

நம்பி வாக்களித்த மக்களை எந்த சந்தர்ப்பத்திலும் ஏமாற்றப்போவதில்லை என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் எம்மை நம்பி வாக்களித்துள்ளனர். இந்நிலையில் மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையை எந்த சமயத்திலும் நாம் மீறத்தயாராகவில்லை. அந்த வகையில் நோக்கும் போது மக்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தே வருகின்றோம்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியை தான் முன்னெடுக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றனார். அதேபோன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெளிநாடுகளிலிருந்து பணத்தை கொண்டு வருகின்றீர்களா இல்லையா என வினவுகின்றார். குறித்த தரப்பினரை சிறிது காலத்திற்கு அமைதியாக இருக்குமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். ஜனாதிபதி தேர்தலில் வேறு கட்சிகளுக்கு வாக்களித்த மக்கள் தற்போது தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்த்துள்ளனர். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே அமைக்கப்பட்டுள்ளது. - என்றார். (அ)

# வடக்கு - கிழக்குக்கு வெளியில் தேர்தலில் போட்டியிடுவது தமிழ் தேசிய அரசியலை வலிந்து தூக்கிலிடும் செயல்பாடு

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 06

வடக்கு - கிழக்குக்கு வெளியில் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் போட்டியிட முயற்சிப்பது, தமிழ்த் தேசிய அரசியலை வலிந்து தூக்கிலிடுவதற்கு ஒப்பானது என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அவ்வாறான நகர்வுகள் தமிழ்த் தேசிய இறைமை அரசியலை அடையாள அரசியலாகச் சுருக்கும் முயற்சியாகும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பி டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள், வாக்களிப்பின் வெவ்வேறு பரிமாணங்களையும் மக்களின் அரசியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்தியுள்ளன.

தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தினால் ஏற்பட்ட அலையில் இளைஞர்கள் உள்ளிட்ட தமிழ் மக்கள் மத்திய ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கரிசனை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

அதேபோன்று தமிழ் பிரதிநிதித்துவம் ஏலவே இல்லாமல் போயுள்ள அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் விட்டுக் கொடுத்தல் அல்லது இணைந்து போட்டியிடக்கூடிய பொருத்த மான பொறிமுறையின் ஊடாக அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டும் - என்றுள்ளது. (அ)

# பல ஆண்டுகளுக்கு பின்னர் அலரி மாளிகை வீதி திறப்பு

கொழும்பு, ஒக். 06

கொழும்பு அலரி மாளிகைக்கு அருகில் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில் இருந்து ரொடுண்டா சுற்றுவட்டம் வரை செல்லும் வீதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக நீண்ட காலமாக இந்த வீதி மூடப்பட்டிருந்தது.

இந்த வீதி திறக்கப்பட்டமையால் சுற்றுவட்டார பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டதோடு, பொதுமக்கள் இலகுவாக பயணிக்க வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# கொழும்புக்கு அனுப்பி வைப்பதாகக் கூறப்பட்டு கூட்டிச் செல்லப்பட்ட 2 சிறுமிகள் துஷ்பிரயோகம்

## பஸ் சாரதி, நடத்துநர் மட்டக்களப்பு பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஒக். 06

காத்தான்குடியில் இருந்து கொழும்புக்கு செல்ல முயன்ற இரு 14 வயதுச் சிறுமிகளை திருகோணமலைக்கு அழைத்து சென்று இரு நாட்கள் அடைத்துவைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த தனியார் பஸ் நடத்துநர் மற்றும் சாரதி ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரு சிறுமிகள் பெற்றோர்களின் தொல்லை தாங்கமுடியாது, கொழும்புக்கு சென்று வாழவேண்டும் என வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

நண்பிகளான 14 வயதுடைய இரு சிறுமிகளை கொழும்பு ரயில் ஏற்றிவிடுவதாக திருகோணமலையில் ஹோட்டல் ஒன்றுக்கு கொண்டு சென்று இரு நாட்களாக அடைத்து வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு காத்தான்குடி பகுதியில் நள்ளிரவில் இறக்கிவிட்டு சென்ற தனியர் பஸ் நடத்துநர், அதன் சாரதி ஆகிய இருவரை நேற்று சனிக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமிகள் இருவரும் சம்பவ தினமான 2ஆம் திகதி புதன்கிழமை காலையில் பாடசாலை செல்வதாக வீட்டை விட்டு வெளியேறி பாடசாலைக்கு செல்லாமல் அங்கிருந்து மட்டக்களப்பு நகருக்கு செல்லும் பஸ் ஒன்றின் மூலம் நகருக்கு சென்று அந்த பகுதியிலுள்ள ஓர் இடத்தில் தமது பாடசாலை உடைகளை மாற்றிவிட்டு பஸ் தரிப்பு நிலையத்தில் கொழும்பு செல்வதற்காக காத்திருந்தனர்.

இதன்போது அக்கரைப்பற்றில் இருந்து திருகோணமலை நோக்கி பிரயாணித்த தனியார் பஸ் மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு வந்தது. அந்த பஸ்ஸில் ஒட்டமாவடி சென்று அங்கிருந்து கொழும்பிற்கு செல்லமுடியும் என இரு சிறுமிகளும் திருகோணமலை பஸ்ஸில் ஏறி ஒட்டுமாவடி செல்வதற்காக பணத்தை வழங்கி பிரயாண சீட்டை பெற்றுக் கொண்டனர்.

இந்த பஸ் வாகரை பிரதேசத்தை சென்றடைந்த நிலையில் நித்திரையில் இருந்த இரு சிறுமிகளிடம் நடத்துநர் சென்று ஒட்டமாவடிக்கு ரிக்கெட் எடுத்துவிட்டு இறங்காமல் இருந்துள்ளீர்கள். தற்போது வாகரைக்கு வந்துள்ளீர்கள் என கூறியபோது தாங்கள் கொழும்புக்கு போவதற்தாக வந்துள்ளதாக தெரிவித்தனர். திருகோணமலை சென்று அங்கிருந்து ரயிலில் செல்லமுடியும். நான் ரயிலில் ஏற்றி விடுவதாக நடத்துநர் தெரிவித்து அவர்களை திருகோணமலைக்கு அழைத்து சென்றுள்ளார்.

திருகோணமலையை சென்றடைந்ததும் இரு சிறுமிகளை ரயில் நிலையத்துக்கு சென்ற நிலையில் ரயில் கொழும்பு நோக்கி புறப்பட்டுச் சென்று விட்டது. இனி கொழும்புக்கு பஸ் இல்லை. காலையில் தான். எனவே அதுவரை இருவரையும் அறை ஒன்றில் தங்கவைத்து அனுப்புவதாக தெரிவித்து இருவருக்கும் ஹோட்டலில் இரு அறைகளை எடுத்து அந்த சிறுமிகளுடன் நடத்துநரும் சாரதியும் தங்கியிருந்து அவர்களை இரு தினங்கள் வைத்து பாலியல் துஷ்பிரயோம் செய்துள்ளனர்.

இதனையடுத்து இரு சிறுமிகளையும் திருகோணமலையில் இருந்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு காத்தான்குடியில் கொண்டுவந்து விட்டுள்ளனர். சிறுமிகள் என்ன செய்வது என தெரியாது வீடுகளுக்கு திரும்பிச் சென்று தமக்கு ஏற்பட்ட பரிதாப நிலையை தெரிவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதனை தொடர்ந்து திருகோணமலை மற்றும் கல்முனை நாற்பட்டிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 35, மற்றும் 27 வயதுடைய நடத்துனர் சாரதி ஆகிய இருவரையும் கைது செய்ததுடன் தனியார் பஸ்ஸை மீட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட இரு சிறுமிகளையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியபோது அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.